மார்ச் 2008 March | இதழ் 206 ISSUE

# தமிழர் தகவல்

# TAMILS' INFORMATION



Growing with the Community
ESTD-1991

இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி
a monthly information digest

18 வது ஆண்டில்
18th Year

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION
ISSN 1206-0585

ஸ்தாபிதம்
பெப்ரவரி 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

தொலைபேசி
416 920 9250
தொலைநகல்
416 921 6576

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம்,
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

முதன்மை ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
ரஞ்சி திரு

உதவி ஆசிரியர் &
தயாரிப்பு முகாமையாளர்
சசி பத்மநாதன்

உதவி ஆசிரியர்கள்
அன்ரன் கனகசூரியர்
குயின்ரஸ் துரைசிங்கம்

பொது முகாமையாளர்
எஸ். ரி. சிங்கம்

விநியோக முகாமையாளர்
ஆர். ஆர். ராஜ்குமார்

பொதுமக்கள் தொடர்பு
இ. சிவலிங்கம்
எஸ். திருமுருகா
ப. சிவசுப்பிரமணியம்
பொன். சிவகுமாரன்
என். குமாரதாஸன்
நா. விமலநாதன்

தொழில்நுட்ப உதவி
ஹரன் கிறாஃப்

மாதாந்தம்
5000 பிரதிகள்

ஆண்டு மலர்
6000 பிரதிகள்

**ஆசிரியரிடமிருந்து** **From the Editor**

## இருபத்தியிரண்டு போதும்

விலைவாசி 'றொக்கட்' வேகத்தில் ஏறிச் செல்கிறது; எரிபொருள் விலை 'ஜெட்' போன்று உயர உயரப் பறக்கிறது; போக்குவரத்துக் கட்டணம் ஆண்டாண்டு அதிகரிக்கிறது; சிகரட், மதுபானம் ஆகியவற்றின் விலையும்தான் விண் நோக்கி ஓங்குகின்றன; போதாக்குறைக்கு பொதி வரி, சொத்து வரி, வீட்டு வரி, சோலை வரி என்று வரிகளும் படிகள் ஏறுகின்றன; அஞ்சல் தலையும் (முத்திரை) ஒவ்வொரு சதத்தால் முன்னேறுகிறது; இந்த வரிசையில் அரசியல்வாதிகளும் தங்கள் பணிக்கான படிகளைத் தாமாகவே அதிகரித்துக் கொள்கின்றனர். அப்பாவிப் பொதுமக்கள் பத்திரிகைகளில் 'ஆசிரியருக்குக் கடிதம்' எழுதிவிட்டுத் தூங்க வேண்டியதுதான்! கனடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமக்குத் தாமே சம்பளத்தை உயர்த்திக் கொண்டனர். ஒன்ராறியோ மாகாணசபை உறுப்பினரும், 'அண்ணன் வழித் தம்பிகளாகி' தங்கள் படியை அதிகரித்துக் கொண்டனர். ரொறன்ரோ நகரசபையும் இதனையே செய்து கொண்டது. தங்களுக்கு வாக்களித்த மக்கள் கொட்டாவி விட, தெரிவு செய்யப்பட்ட 'மக்கள் பிரதிநிதிகள்' தமக்குத் தாமே சம்பளத்தை உயர்த்திக் கொள்கின்றனர். இதுதான் ஜனநாயகம், இவர்கள்தான் அரசியல்வாதிகள். அரைத் தசாப்தத்துக்கு முன்னர், தனித்தனி நகரசபைகளாகவிருந்த ஸ்காபரோ, ரொறன்ரோ, வடயோரக், கீழ்யோர்க், எற்றோபிக்கோ, யோர்க் ஆகிய ஆறும், 'மெகாசிற்றி' என்ற பெயரில் ஒன்றாக்கப்பட்டன. இங்கு வாழுபவர்களில் ஐம்பது வீதமானவர்கள் வந்தேறு குடிகள் - அதாவது குடிவரவாளர்கள். இது சும்மா குத்துமதிப்பல்ல; அதிகாரபூர்வ புள்ளிவிபரம். ரொறன்ரோ பெருநிலப்பரப்பில் இருபத்தியிரண்டு தேர்தல் தொகுதிகள் உள்ளன. கனடிய நாடாளுமன்றத்துக்கும், ஒன்றாறியோ மாகாண சபைக்கும் தலா 22 உறுப்பினர்கள் உள்ளனர். இதே அடிப்படையில்தான், ரொறன்ரோ பெருநகருக்கான அங்கத்தவர் வட்டாரங்களும் பிரிக்கப்பட்டன. அதாவது, ரொறன்ரோ நகரசபை வருமானத்துக்கு ஏற்ற வகையில் நிர்வாகத்தை நடத்த 22 நகரசபை உறுப்பினர்கள் போதும் என்பதே இதன் அர்த்தம். ஆனால், ரொறன்ரோ நகர-சபை உறுப்பினர்கள் தொகை எவ்வாறோ நாற்பத்தி நான்காக உயர்த்தப்பட்டு விட்டது. ஒவ்வொரு வட்டாரத்துக்கும் இரண்டு உறுப்பினர்கள் ஆக, தற்போது நாற்பத்து நான்கு உறுப்பினர்கள் மற்றும் நகர முதல்வர் என நாற்பத்தியைந்து பேருடன் ரொறன்ரோ நகரசபை இயங்குகின்றது. ரொறன்ரோ நகரசபை தனது செலவுக்குப் பணத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகக் கூறி, இந்த வருடத்தில் பல வரிகளை அதிகரித்தது. சமூக சேவை நிலையங்களில் கட்டணங்களை அறிமுகம் செய்துள்ளது. பணித்தல நேரங்களைக் குறைத்துள்ளது. ஆனால் நகர சபை உறுப்பினர்களதும் நகர முதல்வரினதும் பணிக்கொடையை அதிகரித்துள்ளது. இதனைச் சில உறுப்பினர்கள் விரும்பவில்லை. மக்களின் வரிப்பணம் கரியாக்கப்படுகின்றது என்பது இவர்களின் அபிப்பிராயம். இதனால் ரொறன்ரோ நகரசபை உறுப்பினர்கள் தொகையை இருபத்தியிரண்டாக்க வேண்டும் என்ற பிரேரணையை இரு உறுப்பினர் கொண்டு வரவுள்ளனர். சமூகத்தின் ஒரு அலகு என்னும் வகையில் இதனைத் தமிழர் தகவல் வரவேற்கின்றது. ஆரோக்கியமான இந்தப் பிரேரணையை வலுவாக்க, ரொறன்ரோ மக்கள் ஒருமித்துக் குரல் கொடுக்க வேண்டும் என்பது எமது அபிப்பிராயம்.

திரு எஸ். திருச்செல்வம்

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION
ISSN 1206-0585

Established
February 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

Tel: 416 920 9250
Fax: 416 921 6576

email
tamilsinfo@sympatico.ca

Produced by
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

Published by
Ahilan Associates

Editor in chief
Thiru S. Thiruchelvam

Associate Editor
Ranji Thiru

Assistant Editor and Production Manager
Sasi Pathmanathan

Assistant Editors
Anton Kanagasooriyar
Quintus Thuraisingam

General Manager
S.T. Singam

Circulation Manager
R. R. Rajkumar

Public Relation
R. Sivalingam
S. Thirumuruga
P. Sivasubramaniam
Pon. Sivakumaran
N. Kumaradasan
N.Vimalanathan

Technical Support
Haran Graph

Monthly
5000 Copies

Annual
6000 Copies



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடும்ப டாக்டர்கள் வாடிக்கை நோயாளரை 'டிஸ்மிஸ்' செய்ய முடியும்!

**Doctors can dismiss or fire their patients**

நோயாளர்கள், பாதிக்கப்பட்ட நோயாளர்களின் உறவினர்கள் ஆகியோர் டாக்டர்களையும், வைத்தியசாலை நிர்வாகங்களையும் நீதிமன்றத்துக்கு இழுத்து, நஷ்டஈடு கோரும் சம்பவங்களைப் பார்த்திருக்கின்றோம். அதற்கு எதிர்மாறாக, டாக்டர்கள் தமது வாடிக்கையான நோயாளர்களை 'டிஸ்மிஸ்' செய்ய முடியும் என்பது இப்போது தெரியவந்துள்ளது.

A doctor can dismiss or fire his/her patient என்று கனடிய மருத்துவ கவுன்சில் அறிவித்துள்ளது. இதன் அர்த்தமானது, ஒரு நோயாளரைத் தமது பட்டியலிலிருந்து விலத்தும் உரிமை டாக்டருக்கு உண்டு என்பதாகும். ஆனால், இதற்கான காரணத்தைச் சம்பந்தப்பட்ட நோயாளருக்கு டாக்டர் எழுத்து மூலம் அறிவிக்க வேண்டியது கட்டாயம்.

அதேசமயம், அந்த நோயாளர் புதிதாக ஒரு குடும்ப டாக்டரைத் தமக்கு ஏற்படுத்தும்வரை தொடர்ந்து அவருக்குச் சிகிச்சை அளிக்கவும் வேண்டும்.

ஏற்க முடியாத நடத்தை, அடிக்கடி சந்திப்பு நேரத்தை (appointments) ரத்துச் செய்வது, வைத்திய பரிசோதனைகளைச் செய்யாது அலட்சியம் செய்வது போன்ற காரணங்களுக்காக ஒரு நோயாளரை டாக்டர் விலத்தலாம் என்று வைத்திய கவுன்சில் கூறுகிறது.

நோயாளர் ஒருவர் தமக்கு வழங்கப்பட்ட நேரத்துக்குப் பத்து நிமிடங்கள் தாமதமாகச் சென்ற காரணத்துக்காக அவரது டாக்டர் அவரை 'டிஸ்மிஸ்' செய்ததையடுத்தே இந்த விடயம் சூடு பிடிக்க ஆரம்பித்துள்ளது.

"வழக்கமாக குடும்ப வைத்தியர்கள் சுமார் அரை மணி, ஒரு மணி நேரம் காக்க வைத்த பின்னரே தமது நோயாளரைப் பார்வையிடுகின்றனர். இதனை யாரிடம் முறையிடுவது?" என்று கனடிய மைய வானொலி ஒன்றில் இது தொடர்பாகக் கருத்து வெளியிட்ட ஒரு நேயர் தெரிவித்தார்.

டாக்டர்கள் தமது வாடிக்கையான நோயாளர்களை விரும்பும் நேரத்தில் விலத்த வழங்கப்பட்டுள்ள உரிமையை வன்மையாகக் கண்டித்து பல பொதுமக்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## இலஞ்சக் குற்றச்சாட்டு ஹாப்பர் அரசுக்கு தூக்குக் கயிறு?

### வசந்தத்தில் தேர்தல் என்று முணுமுணுக்கிறது லிபரல்

விரைவில் கனடிய பொதுத்தேர்தல் என்னும் பேச்சு மீண்டும் ஆரம்பமாகியுள்ளது. மத்திய லிபரல் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களே இதனை ஊடகங்களிடம் தெரிவித்து வருகின்றனர்.

முன்னரும் பல தடவை 'விரைவில் தேர்தல்' என்று ஊடகங்கள் தெரிவித்தனவாயினும், டியோன் தலைமையிலான மத்திய லிபரல் கட்சி தேர்தலைச் சந்திக்க அச்சம் கொண்டிருப்பதால், ஆட்சியைக் கவிழ்க்க முன்வரவில்லை.

ஸ்டீபன் ஹாப்பர் தலைமையிலான கன்சர்வேடிவ் கட்சி ஒரு சிறுபான்மை அரசு. அதனிடம் அறுதிப் பெரும்பான்மை இல்லை. எதிர்க்கட்சிகளான லிபரல், என். டி. பி, புளொக் கியுபெக்கா ஆகிய மூன்றும் ஒன்றாக இணைந்து வாக்களித்தால் அரசு கவிழ்வது நிச்சயம். கடந்த இரண்டாண்டுகளில் இதற்கான சில சந்தர்ப்பங்கள் எதிர்க்கட்சிகளுக்குக் கிடைத்தன,

ஆனால், லிபரல் தனது பலவீனத்தினால் அவ்வாறு அரசுக்கு எதிராக வாக்களிக்கத் தயாராக இருக்கவில்லை. இப்படிப் பார்க்கும் போது, ஸ்டீபன் ஹாப்பரின் சிறுபான்மை அரசு தொடர்ந்து ஆட்சியிலிருப்பதற்குப் பலமாக அமைந்தது பலவீனமான லிபரல் கட்சியே.

பெப்ரவரி கடைசி வாரத்தில் ஹாப்பர் அரசு தனது வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்தது. அதன் வாக்கெடுப்பில் என். டி. பியும் புளொக் கியுபெக்காவும் அரசை எதிர்த்து வாக்களிக்க முடிவெடுத்தன. ஆனால் லிபரல் கட்சி அரசை ஆதரிக்க முடிவெடுத்தது. எனவே, விரைவில் தேர்தல் வராது என்ற நிலைமை ஏற்பட்டது.

ஆனால், சில நாட்களுக்குள் திடுதிப்பென ஒரு மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதற்குக் காரணம், 2005 ஆண்டில் ஆட்சியிலிருந்த லிபரல் அரசைக் கவிழ்க்க, அன்று எதிர்க்கட்சியிலிருந்த கன்சர்வேடிவ் எடுத்த ஒரு நடவடிக்கை சம்பந்தமான சமாசாரம் அம்பலத்துக்கு வந்தமையே.

அப்போது லிபரல் கட்சி சிறுபான்மை அரசாக இருந்தது. ஓரிரு சுயேட்சை எம் பிக்களிலேயே அரசின் பலம் தங்கியிருந்தது. அச்சமயம் நடந்தது என்ன என்பதைப் பார்ப்போம்:

'2005 மே மாதம் 19 திகதி, லிபரல் அரசு ஒரு நம்பிக்கை வாக்கெடுப்பை நாடாளுமன்றத்தில் நடத்தியது. சக் கட்மென் என்னும் சுயேட்சை எம் பியின் ஒரு வாக்கிலேயே வெற்றி தோல்வி தங்கியிருந்தது. கட்மன் அவ்வேளை புற்று நோயினால் பீடிக்கப்பட்டு உயிருடன் போராடிக் கொண்டிருந்தார். (பின்னர் மரணமாகிவிட்டார்). இவரது வாக்கைத் தம்பக்கம் இழுப்பயற்காக இவருக்கு பத்து லட்சம் (ஒரு மில்லியன்) டாலருக்கான ஆயுட் காப்புறுதியை லஞ்சமாகக் கொடுக்க சன்சர்வேடிவ் கட்சி நடவடிக்கை எடுத்தது. ஆனால் கட்மன் அதனை ஏற்காது, லிபரல் ஆட்சியைக் காப்பாற்றினார்' என்பதுதான் விடயம்.

ஆனாலும், அவ்வருட இறுதியில் லிபரல் ஆட்சி கவிழ்ந்தது. 2006 ஜனவரி 23 திகதிய பொதுத் தேர்தலில் கன்சர்வேடிவ் சிறுபான்மை அரசு ஆட்சிக்கு வந்தது.

திரு. கட்மனின் வாழ்க்கைச் சரித நூல் இந்த மாதம் வெளிவரவுள்ளது. கட்மனின் பாரியார் இந்த இலஞ்ச விவகாரத்தை நூலில் வெளிப்படுத்தியுள்ளார் என்று லிபரல் கட்சியினர் நாடாளுமன்றத்தில் அறிவித்து, ஆட்சியைக் கவிழ்க்க நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.

கனடிய தேசிய காவற் படையான ஆர் சி. எம். பியிடம் இந்த விசாரணை ஒப்படைக்கப்பட வேண்டுமென்று லிபரல் வலியுறுத்தி வருகின்றது. கட்மனின் மகள் ஜோடி கட்மனும் இது தொடர்பான பகிரங்க விசாரணை நடத்தப்பட வேண்டுமென்று கோரியுள்ளார். தமது தந்தைக்கு இலஞ்சம் கொடுக்க முனைந்தது உண்மை என்றும், இது விடயம் அவரது நூலில் இடம்பெற்றுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த இலஞ்ச விவகாரம், கன்சர்வேடிவ் கட்சிக்கு தூக்குக் கயிறாக மாறுமா?



எஸ்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். சண்முகராஜா
RN, Dip. Nursing Ed.

# சர்க்கரையோடு எச்சரிக்கை தேவை!

தித்திக்கும் தீனிகளும் தேன்சுவைமாப் பண்டமதும்
சித்திக்கும் பேருடலாய்ப் பின்னாளில் - புத்தியில்லை
நல்ல உணவுண்டு நாளுமுடல் வேர்த்துழைத்தால்
இல்லை சலரோக நோய்.

சிலகாலங்களுக்கு முன்னர் எமது சமூகத்தில் செல்வந்தர்களிடையே மட்டும் பரவலாகக் காணப்படுவதாகக் கருதப்பட்ட diabetes mellitus என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் நீரிழிவு நோய் ஏறக்குறைய 15 பேருக்கு ஒருவர் என்ற விகிதத்தில் கனடிய மக்களிடையே காணப்படுகிறது என்பதும், புலம்பெயர்ந்த கிழக்காசிய, ஆபிரிக்க மக்களிடையே இந்த விகிதம் இன்னும் அதிகம் என்பதும் அதிர்ச்சி தரும் செய்திகளாகும். நீரிழிவு நோய், சலரோகம், சர்க்கரை வியாதி என தமிழில் வேறு பெயர்களாலும் அழைக்கப்படுகிறது. இக்கட்டுரையில் கருத்தின் பொருத்தம் கருதி நீரிழிவு என்ற பதத்தையே பயனபடுத்துகிறேன்.

**நீரிழிவு நோய் என்பது என்ன?**
நாம் உண்ணும் உணவிலுள்ள மாச்சத்து (starch), சர்க்கரைச்சத்து (sugar) ஆகியன சிறுகுடலில் சமிபாடடையும் போது குளுக்கோஸ் (glucose) எனப்படும் எளிய சர்க்கரைச் சத்தாக மாற்றமடைந்து குருதிச்சுற்றோட்டத்தினுள் உறிஞ்சப்படுகின்றது. உறிஞ்சப்பட்ட குளுக்கோஸ் உடற் கலங்களுக்குள் அனுப்பப்பட்டு உடற்தொழிற்பாட்டுக்கு அவசியமான சக்தியை அளிப்பதற்கும் மேலதிகமாக உள்ள குளுக்கோஸ் உடற்கலங்களில் சேமித்து வைக்கப்படுவதற்கும் சதயம் (pancreas) எனப்படும் சுரப்பியிலிருந்து சுரக்கப்படும் இன்சுலின் (insulin) என்னும் கோர்மோன் அவசியமாகிறது. இச்செயற்பாட்டின் மூலம் குளுக்கோசின் அளவும் எமது குருதியில் குறிப்பிட்ட ஒரு மட்டத்தில் வைக்கப்படுகிறது. இன்சுலின் சுரப்பில் ஏற்படுகின்ற கோளாறினாலோ அல்லது அதன் தொழிற்பாட்டில் ஏற்படுகின்ற கோளாறினாலோ அல்லது இரண்டும் சேர்ந்த காரணத்தாலோ எமது குருதியில் குளுக்கோசின் அளவு கட்டுப்படுத்தப்படாமல் அதிகரித்துப் போவதால் நீரிழிவு நோய் ஏற்படுகின்றது. குருதியில் குளுக்கோசின் அளவு அதிகரிக்கும்போது அது சிறுநீர் மூலம் கழிவகற்றப்படுகிறது.

நீரிழிவு நோய் கட்டுப்படுத்தப்படாமல் நீண்ட நாட்களுக்குத் தொடரும்போது சிறுநீரகம், குருதிக் குழாய்கள், கண்கள், நரம்புத் தொகுதி ஆகியவற்றில் பாதிப்பு ஏற்படுகிறது. நீரிழிவு நோய் குருதிக் குழாய்களில் அடைப்பை ஏற்படுத்தக்கூடிய முதன்மைக் காரணியாக இருப்பதால் மாரடைப்பு, பக்கவாதம் போன்ற ஆட்கொல்லி நோய்கள் ஏற்படவும் ஏதுவாக இருக்கிறது. இதனால் வட அமெரிக்க நாடுகளில் இதய நோய், புற்றுநோய் ஆகியவற்றிற்கு அடுத்ததாக இறப்பை ஏற்படுத்துவதில் மூன்றாவது காரணியாக நீரிழிவு நோய் இருப்பதாகக் கூறப்படுகிறது.

நீரிழிவுநோய் ஏற்பட்டால் அதனை முற்றிலுமாகக் குணமாக்க முடியாது எனினும் சிகிச்சை முறைகளினால் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்து சிக்கல்களைத் தவிர்த்து நலமான நீண்ட நாள் வாழ்க்கையை வாழ முடியும் என்பதை நாம் கவனத்தில் கொள்வது அவசியம்.

**நீரிழிவு நோயின் வகைகள்**
நீரிழிவு இரண்டு பிரதான வகைகளாக வகுக்கப்படுகிறது
**வகை1 (type1)** - இன்சுலினைச் சரக்கின்ற சதயச் சுரப்பியிலுள்ள கலங்கள் அழிந்து போகும்போது இன்சுலின் சுரப்பு முழுமையாக அற்றுப் போவதனால் இது ஏற்படுகின்றது. இந்த வகை நோயாளர்களுக்கு இன்சுலின் மருந்து நாளாந்தம் ஏற்றப்பட வேண்டியது அவசியம். இதன் காரணமாக இந்த வகையை insulin dependant diabetes mellitus எனவும் ஆங்கிலத்தில் அழைக்கின்றனர். இது இளம்வயதினரில் வழமையாக 30 வயதுக்குட்பட்டவரில் ஏற்படுகிறது. சில வைரசு தொற்று நோய்களும், பரம்பரைக் காரணிகளும் இவ்வகை நீரிழிவை ஏற்படுத்துவதாகக் கருதப்படுகின்றது.

**வகை2** (type2) – இது non-insulin dependant diabetes mellitus என ஆங்கிலத்தில் அழைக்கப்படுகின்றது. இந்த வகையினரில் இன்சுலின் சுரக்கப்பட்டாலும் உடலின் தேவைக்கேற்ற அளவுக்கு இன்சுலின் சுரப்பு போதாது இருத்தல் அல்லது சுரக்கப்படும் இன்சுலினின் வீரியம் குன்றியிருத்தல் அல்லது உடற்கலங்களால் உரிய முறையில் இன்சுலினைப் பயன்படுத்தமுடியாது போதல் ஆகிய காரணங்களால் நோய் உண்டாகின்றது.

இந்த வகை அனேகமாக 40 வயதிற்கு மேற்பட்டவர்களில் ஏற்பட்டாலும் தற்போது உடற்பயிற்சியின்மை, முறையற்ற உணவுப்பழக்கம், கட்டுப்பாடற்று அதிகரிக்கும் உடற்பருமன் ஆகிய காரணங்களால் மிக இளம் வயதினிலே இவ்வகை நீரிழிவு ஏற்படுவதாக அறியப்படுகிறது.
வகை2 நீரிழிவு ஏற்படுவதற்கு மரபுசார் காரணி முக்கியமான-தொன்றாகக் காணப்பட்டாலும், குறிப்பிடக்கூடிய வேறு சில காரணிகளும் இருக்கின்றன. இவற்றில் அதிகரித்த உடற்பருமன் முக்கியமானதொன்றாகும். இந்தவகை நீரிழிவு நோயாளருக்கு பொதுவாக உணவு, மாத்திரைகள், உடற்பயிற்சி மூலமாக மருத்துவம் செய்யப்படுகிறது. ஆனால் பல நோயாளருக்கு நாளாக ஆக இன்சுலின் சுரப்பு படிப்படியாக நன்றாகக் குறைந்து போகின்ற ஆபத்து இருப்பதால் கடைசியில் இந்த வகையினருக்கும் இன்சுலின் ஏற்ற வேண்டிய தேவை ஏற்பட்டுவிடுகின்றது.

நீரிழிவு நோயாளரில் 10 வீதமானோர் வகை1ஐயும் 90 வீதமானோர் வகை2ஐயும் சேர்ந்தவர்களாக இருக்கின்றனர்

**வேறு வகைகள்**

**கர்ப்பகால நீரிழிவு**
கர்ப்பிணிப் பெண்களில் 2-5 வீதமானோரில் குருதியில் குளுக்கோசின் மட்டம் அதிகரித்து தற்காலிகமாக நீரிழிவு ஏற்படுகிறது. இதன்போது சிலருக்கு இன்சுலின் சிகிச்சையும் தேவைப்படுகிறது. வழமையாக குழந்தை பிறந்தவுடன் இந்த நிலை குணமடைந்து விடுகிறது. எனினும் கர்ப்பகாலத்தில் நீரிழிவு ஏற்பட்ட 25 – 50 வீதமான பெண்கள் பிற்காலத்தில் வகை2 நீரிழிவு நோயினால் பாதிக்கப்படுவதாக தரவுகள் தெரிவிக்கின்றன. (31ம் பக்கம் வருக)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்த மருந்தைப் பார்த்ததும் அவரின் முகம் ஏமாற்றத்தால் நீண்டது. "இண்டைக்கும் இதே மருந்துதானா" . "எல்லோரும் ஏதேதோ புதுப் புது மருந்துகளாகப் பாவிக்கிறம் எண்டு சொல்லுகினம். நீங்கள் இந்த மெட்போமினையே தாறீங்கள்" என்றார்

நீங்கள் ஒரு நீரிழிவு நோயாளரா? அப்படியாயின் நீங்கள் மெட்போமின் என்ற சொல்லை நிச்சயம் கேள்விப்பட்டிருப்பீர்கள். உங்கள் நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தப் பயன்படுத்தப்படும் மருந்துகளில் இதுவும் பெரும்பாலும் சேர்ந்திருக்கும். நீண்டகாலமாகப் பாவிக்கின்றோமே, இது ஏதாவது பாதிப்பை ஏற்படுத்துமா? மலிஞ்ச மருந்துதானே நல்லதா? சிறுநீரகத்திற்கு கூடாதாமே? வயிறு ஊதலாக இருக்கிறதே எனப் பல சந்தேகங்களும் அதிருப்திகளும் ஏற்பட்டிருக்கலாம்.

அத்துடன் தொடர்ந்து ஒரே மருந்தை உபயோகிப்பதால் 'புதுமை விரும்பிகளுக்கு' அலுத்துப் போயிருக்கலாம். ஆனாலும் இது மிகவும் பயனுள்ளது மட்டுமன்றி பன்முகப் பயன்பாடும் உள்ளது என்பதால் அதனுடைய முக்கியத்துவம் பற்றி நீங்கள் தெரிந்து கொள்வது நல்லது.

மனிதர்களின் சாதாரண இரத்த குளுக்கோஸ் அளவானது 60 - 110 ற்கும் இடையில் இருக்கவேண்டும். 60 இற்குக் கீழே குறைவது ஆபத்தானது. அவ்வாறு குறைந்தால் மயக்கத்திற்கும் இட்டுச்செல்லக்கூடும். இந்நிலையை Hypoglycemia என மருத்துவத்தில் குறிப்பிடுவார்கள். இம்மருந்தின் மிக முக்கியமான பண்பு என்னவென்றால், உபயோகிக்கும் நோயாளியின் இரத்த குளுக்கோஸ் அளவை ஆபத்து ஏற்படும் அளவிற்கு அதீதமாகக் குறைப்பதில்லை. எனவே பாதுகாப்பானது. ஆனால் ஏனைய பல நீரிழிவு மாத்திரைகள் இரத்த குளுக்கோஸ் அளவை அதீதமாகக் குறைத்து Hypoglycemia க்கு இட்டுச் சென்றுவிடுகின்றன.

மெட்போமின் மருந்தின் இன்னொரு முக்கியமான பண்பு அல்லது "பக்கவிளைவு" நோயாளியின் எடையைக் குறைப்பதாகும். பெரும்பாலான நீரிழிவு நோயாளிகளின் எடை அதீதமாக இருப்பதுண்டு. இதனால் நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்த எடையைக் குறைக்க வேண்டியிருக்கும். மெட்போமின் மாத்திரையானது எடையைக் குறைக்கவும் உதவி செய்வதால் உங்களுக்கு ஒரு போனஸ் பலனும் கிட்டுகிறது.

மெட்போமின் உங்கள் இரத்த கொலஸ்ட்ரோல் அளவையும் சற்றுக் குறைக்கிறது. மொத்த கொலஸ்ட்ரோல்

# பழசானாலும் பயன் கூடியது

## டாக்டர். எம்.கே. முருகானந்தன்

அளவை மாத்திரமன்றி கூடாத கொலஸ்ரோல்களான ரைகிளிசரைட் LDL ஆகியவற்றையும் ஓரளவு குறைக்கிறது. இதனால் குருதிக் குழாய்களில் கொழுப்புப் படிவதும் கட்டுப்படுத்தப்படுகிறது. அத்துடன், இரத்தக் குழாய்களினது உட்சுவர்க் கலங்களின் செயற்பாட்டை (Endothelial Function) ஊக்குவிக்கிறது. இவற்றின் காரணமாக மாரடைப்பு, பக்கவாதம், திடீர் மரணம் ஆகியன ஏற்படும் வாய்ப்புகளும் குறையும் என்பதும் ஆய்வு ரீதியாக அறியப்பட்டுள்ளது.

உயர் இரத்த அழுத்தத்தை அதாவது பிரஸரைக் குறைப்பதிலும் மெட்போமின் மாத்திரைக்கு பங்குண்டு எனச் சில ஆய்வுகள் கூறுகிறபோதும் இது இன்னமும் உறுதியாக நிச்சயப்படுத்தப்படவில்லை.

மாதவிடாய்க் குழப்பம், மலட்டுத்தன்மை, அதீத எடை, இன்சுலின் எதிர்த்தன்மை (Insulin Resistance) போன்ற உள்ளடங்கிய 'பொலி சிஸ்டிக் ஓவரி சின்றோம்' பிரச்சினை இப்பொழுது பல இளம் பெண்களிடையே காணப்படுகிறது. இந்நோயுள்ள பெண்களின் ஆண்மை ஹோர்மோன் அளவைக் குறைத்து கருமுட்டை உற்பத்தியை ஊக்குவிப்பதையும் மெட்போமின் மாத்திரை செய்கிறது.

பெண்களைப் பற்றிப் பேசும்போது கர்ப்ப காலத்தில் பெண்களுக்கு நீரிழிவு இருந்தால் அதைக் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கு பொதுவாக இன்சுலின் ஊசியே போடுவார்கள். ஆனால், அண்மைய ஆய்வுகள் கர்ப்பகால நீரிழிவு (Gestational Diabetes) கர்ப்ப காலத்திலும் நீடிக்கும் நீரிழிவு வகை 2 (Type 2 Diabetes) ஆகிய இரண்டிற்கும் மெட்போமின் மாத்திரை உபயோகிப்பது பாதுகாப்பானது என்கிறது.

இன்சுலின் ஊசி போடும் ஒரு சில நீரிழிவு நோயாளருக்கு அத்துடன் நீரிழிவு மாத்திரைகளையும் சேர்த்துப் பாவிக்க வேண்டிய தேவை ஏற்படும். இன்சுலின் ஊசியால் மாத்திரம் நீரிழிவைக் கட்டுப்படுத்த முடியாதவர்களுக்கும் இன்சுலின் ஊசி மருந்தின் அளவைக் குறைக்க வேண்டியவர்களுக்கும் மெட்போமின் மருந்தை ஊசியோடு இணைத்து பாவிக்க முடியும். ஏனைய பெரும்பாலான நீரிழிவு மாத்திரைகள் அவ்வாறு இன்சுலினுடன் சேர்த்து உபயோகிக்க ஏற்றவையல்ல. இன்சுலின் ஊசியுடன் மெட்போமின் மாத்திரையைச் சேர்த்து உபயோகிக்கும்போது இன்சுலின் மருந்தின் அளவை 15 முதல் 25 சதவிகிதம் வரை குறைக்க முடிகிறது என்பது நீரிழிவு நோயாளருக்கு இனிப்பான செய்தியாகும்.

இன்சுலின் ஊசியுடன் மாத்திரமல்லாது ஏனைய பல வகையான நீரிழிவு மாத்திரைகளுடனும் சேர்த்தும் பாவிக்க உகந்தது. உதாரணமான Glibenclamide, Glipizide, Gliclazide, Pioglitazone, Acarbose போன்ற அனைத்து வகை மருந்துகளுடன் இணைந்து பாவித்தாலும் பக்கவிளைவுகளை ஏற்படுத்த மாட்டாது.

மெட்போமின் மருந்தைத் தினமும் மூன்று தடவை போடவேண்டிய தொல்லை இப்பொழுது இல்லை. ஒரு நாளைக்கு இரண்டு முறைகளே உபயோகிக்க வேண்டிய Retard மாத்திரைகளாகவும் தினமும் ஒரு தடவை மட்டுமே போடக்கூடிய SR - Slow Release மாத்திரைகளாகவும் இப்பொழுது கிடைக்கிறது.

அப்படியாயின் மெட்போமின் எந்தவித பக்கவிளைவுகளோ, தொல்லைகளோ அற்ற அதிஅற்புத மருந்து என்று கூறலாமா? நிச்சயமாக இல்லை. வயிற்று ஊதுதல், பொருமல், பசியின்மை, வயிற்றோட்டம், வாயில் உலோகச்சுவை போன்ற சாதாரண பக்கவிளைவுகள் இருக்கலாம். அவை பெரும்பாலும் மருந்துகளை உபயோகிக்க ஆரம்பித்த ஆரம்ப நாட்களில் இருக்கும். பிறகு படிப்படியாக மறைந்துவிடும். சிறுநீரக நோய்கள், ஈரல் நோய்கள், அதீத மதுபாவனை போன்றவை இருந்தால் வைத்தியர்கள் இம்மருந்தை அவதானத்துடனேயே உபயோகிப்பார்கள்.

மேலே எழுதியவற்றை அவருக்கு விளக்கியதும் ஏற்றுக்கொண்டு "சந்தோசமாக மெட்போமினுடன் சென்றார்".

(நன்றி தினக்குரல், கொழும்பு)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மணி வேலுப்பிள்ளை
எழுதும் புதிய தொடர் -02

# ஒரு சொல் பல பொருள் கோவை

**ENGLISH - தமிழ்**

1. bank **account** = வங்கிக் கணக்கு
**Account** for your absence = நீ வரத் தவறியதற்கு விளக்கமளி
All passengers have been **accounted** for = பயணிகள் அனைவரையும் பற்றிய விபரங்கள் அறியப்பட்டுவிட்டன
an **account** of the incident = நிகழ்ந்த விவரம் = நிகழ்வரம்
by your own **account** = உங்கள் சொந்த விவரத்தின்படி = நீங்கள் முன்வைக்கும் விவரத்தின்படி
Call to **account** = விளக்கம் கேள்
Don't change your plan on my **account** = எனக்காக உன் திட்டத்தை மாற்றாதே
Give a good **account** of yourself = (1) உன்னைப் பற்றி ஒரு நல்ல எண்ணத்தை உண்டாக்கு
(2) வெற்றி பெறு
Don't give a bad **account** of yourself = (1) உன்னைப் பற்றி ஒரு கூடாத எண்ணத்தை உண்டாக்காதே
(2) தோல்வி அடையாதே
Hold to **account** = பொறுப்பாளியாக்கு
Keep **account** of your expenses = உனது செலவுகளைப் பதிந்து வைத்திரு
Leave out of **account** = கருத்தில் கொள்வதைத் தவிர்
matter of no/little **account** = முக்கியமற்ற விடயம்
matter of some **account** = ஓரளவு முக்கிய விடயம்
on **account** of ill-health = சுகயீனம் காரணமாக
On no **account** should you drink = நீ எக்காரணம் கொண்டும் குடிக்கக் கூடாது
Our anti-aircraft guns have **accounted** for five enemy bombers = எமது விமான எதிர்ப்புப் பீரங்கிகள் எதிரிகளின் ஐந்து குண்டுவீச்சு விமானங்களை அழித்துள்ளன
Put your influence to good **account** = உனது செல்வாக்கை நல்வழியில் பயன்படுத்து
settle **accounts** with = square **accounts** with = (1) கணக்குத் தீர் (2) பழி வாங்கு
Take experience into **account** = அனுபவத்தைக் கருத்தில் கொள்

2. **act** as an interpreter = ஒரு பேச்சு மொழிபெயர்ப்பாளராகச் செயற்படு
**act** dumb = வாய்பேசாதவர் போல் நடி
**act** like a child = ஒரு சிறுபிள்ளையைப் போல் நடந்துகொள்
**act** of God = கடவுள் செயல்
**act** of parliament = நாடாளுமன்றச் சட்டம்
**act** to stop violence = வன்முறையை நிறுத்த நடவடிக்கை எடு
**act** up = கூடா நடத்தையில் ஈடுபடு

3. **action** group = செயற் குழுமம்
**action** of sunlihgt on the skin = சூரிய ஒளி தோலில் ஏற்படுத்தும் தாக்கம்
**action** of the liver = ஈரலின் செயற்பாடு
**action** replay = (1) மீள்காட்சி (2) மீள்நிகழ்வு
**Action** speaks louder than words = சொல்லை விடச் செயலே தாக்கம் மிகுந்தது
**action** stations = சமராடு நிலைகள்
**action**-packed film = பரபரப்பூட்டும் திரைப்படம்
killed in **action** = களத்தில் கொல்லப்பட்ட = போரில் கொல்லப்பட்ட
out of **action** = இயக்கமற்ற

4. **active** imagination = ததும்பும் கற்பனை
**active** ingredient = (இரசாயன) தாக்கம் விளைவிக்கும் கூறு
**active** participation = முன்னின்று பங்குபற்றுகை
**active** seniors = சுறுசுறுப்பான முதியோர்
**active** service = போர்க்காலப் படைச்சேவை
**active** voice = செய்வினை
**active** volcano = கெம்பவல்ல எரிமலை

5. **address** a meeting = ஒரு கூட்டத்தில் உரையாற்று
**address** card = முகவரி அட்டை
**address** the needs = தேவைகளைக் கவனி
**address** your application to me = உன் விண்ணப்பத்தை எனக்கு அனுப்பு

6. **administer** a kick = ஓர் உதை கொடு
**administer** a school = ஒரு பாடசாலையை நிருவகி
**administer** justice = நீதியை நடைமுறைப்படுத்து
**administer** medicine = மருந்து கொடு
**administer** punishment = தண்டனை அளி

7. **advance** a new theory = ஒரு புதிய கோட்பாட்டை முன்வை
**advance** me the money = எனக்கு முன்கூட்டியே பணம் கொடு
**advance** one mile = ஒரு மைல் முன்னகரு
**advance** team = முன்னர் அணி
**advance** the cause of democracy = மக்களாட்சி என்னும் நன்னோக்கத்துக்குத் துணைநில்
**advance** voting = முன்கூட்டியே வாக்களித்தல்

8. **advances** in medical science = மருத்துவ இயல் முன்னேற்றங்கள்
**advances** of the enemy = எதிரியின் முன்னகர்வுகள்
make **advances** to someone = சிற்றின்ப நோக்குடன் ஒருவரை அணுகு

9. **advantage** of education = கல்வியின் பயன்
work to your **advantage** = உன் பயன் கருதிச் செயற்படு
take **advantage** of somebody = ஒருவரைப் பயன்படுத்து

10. Can we **afford** a new car? = எங்களுக்கு ஒரு புதிய கார் (வாங்கக்) கட்டுமா?
I can't **afford** to leave my family = என் குடும்பத்தை விட்டு அகல்வது எனக்குக் கட்டாது = நான் எனது குடும்பத்தை விட்டு அகல முடியாத நிலையில் இருக்கிறேன்
This plan **affords** us a chance = இத்திட்டம் எங்களுக்கு ஒரு வாய்ப்பளிக்கிறது

11. **after** lunch = மதிய உணவுக்குப் பிறகு
The police are **after** him = காவல் துறை அவரைத் தேடித் திரிகிறது
Mom asked **after** you = அம்மா உன் சுகத்தை விசாரித்தார்
Name the baby *Maathu* **after** its grandmother = குழந்தைக்கு *மாது* என்று அதன் பாட்டியின் பெயரைச் சூட்டு
**after**-school program = பாடசாலை வேளைக்குப் பிந்திய நிகழ்வுத்திட்டம்
**After** all, they arrived on time = எவ்வாறாயினும், அவர்கள் வேளைக்கு வந்து சேர்ந்தார்கள்

தொடர்ந்து வரும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுப்பு இன மாணவர்களுக்கான பாடசாலை Black Focused School (Afrocentre School)

கறுப்பு இன மாணவர்களுக்கான தனியான பாடசாலை ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்ற பிரேரணையை 29/1/08 அன்று கல்விச் சார்ப்பு உறுப்பினர்கள் ஏற்றுக் கொண்டனர். இந்தப் பிரேரணைக்கு 11 பேர் சாதகமாகவும், 9 பேர் பாதகமாகவும் வாக்களித்தனர். இருவர் வாக்களிப்பில் பங்களிக்கவில்லை. இப் பிரேரணை நிறைவேற்றப்பட்ட பின்பு அதற்குச் சாதகமாகவும், பாதகமாகவும் மக்களிடையே விவாதங்கள் ஏற்பட்டபடி இருக்கின்றன. மே மாதம் 23 திகதி 2007 இல் C.W. Jeffery's Collegiate விறாந்தையில் வைத்து ஜோர்டன் மனேர்ஸ் என்ற கறுப்பு இன மாணவன் கொலை செய்யப்பட்ட பின்பு அதற்கான காரணங்களை அறிந்து ஒரு அறிக்கையை Julian Falconer என்பவர் சமர்ப்பித்த பின்பு ஏற்பட்ட முடிவே இத்தகைய ஒரு பாட-சாலையாகும்.

கறுப்பு இன மாணவர்களுக்கென ஒரு தனிப்பட்ட பாடசாலை அமைக்கப்பட வேண்டும் என பல வருடங்களாகக் கறுப்பு இன மக்கள் கேட்டபடிதான் இருந்தனர். 1995ல் Royal Commission on Learning கறுப்பு இன மாணவர்கள் மத்தியில் 40% பாட-சாலையால் இடையில் விலகல் (Dropout rate) காணப்படுவதாகவும் அதற்கான பரிகாரம் விரைவில் ஏற்பட வேண்டுமெனவும் சிபார்சு செய்தது. அக்காலம் தொட்டு கறுப்பு இன மக்கள் இதற்கான விடையை தேடியபடியே இருக்கிறார்கள். அதில் ஒன்றுதான் இத்தகைய ஒரு பாடசாலை என்பதாகும். ஏற்கனவே ரொறன்ரோ கல்விச் சபையின் கீழ் 36 மாற்றுப் பாடசாலைகள் (Alternate Schools) காணப்படுகின்றன. இவை பலவிதமான பிரச்சனைகள், கல்விக் குறைபாடுகள், சமூகப் பிரச்சனைகள் உள்ள மாணவர்களுக்காக நடத்தப்படுகின்றன. இங்குள்ள மாணவர்களை தனிப்பட்ட முறையில் அவதானிப்பதால் (one on one basis), இப்பாடசாலைகளின் மாணவர்களின் தொகை 100-200 வரை தான் உள்ளது. ஆகவே கறுப்பு இனத்தவருக்கான மாற்றுப் பாடசாலையிலும் 30,000 கறுப்பு மாணவர்களில் ஒரு வீதம் மாணவர்கள் கூட இங்கு அனுமதி பெற மாட்டார்கள்.

இப்பாடசாலையை 2009 செப்டம்பரில் ஆரம்பிக்கப் போவதாகவும், இதற்கு $820,000 தேவைப்படுவதாகவும், முதற்கட்டமாக $350,000 தேவையென்றும் அறியத் தருகிறார்கள். ஏற்கனவே பற்றாக்குறையான ஒரு வரவு செலவுத்திட்டத்தைச் சமாளிக்க வழி தெரியாது அவலப்படும் கல்வி அமைச்சினால், இப்பாடசாலையின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியுமா என்பது கேள்விக்குறி! இது எந்தக் கல்விப் பிரிவில் அமையப் போகிறது, அப்படியானால் ஏனைய கல்விப் பிரிவுகளில் உள்ள பின்தங்கிய மாணவர்களின் கதி என்ன, எந்த நிலையில், கீழ்ப்பிரிவிலா, மத்திய பிரிவிலா, இரண்டாம் நிலைப் பிரிவிலா இது கற்பிக்கப்படப் போகிறது, எத்தகைய கலைத்திட்டம் இங்கு போதிக்கப்படப் போகிறது என்பன போன்ற கேள்விகளுக்கு சரியான விடைகள் கிடைக்கவில்லை. இதற்கிடையில் ஒன்ராறியோ மாகாண பிரதமர் Dalton McGuinty இதற்கு தனது ஆதரவு இல்லை எனப் பகிரங்கமாகக் கூறியுள்ளார். இதனை நிற்பாட்டும் சக்தி இவருக்கு உண்டு. ஆயினும் அந்தப் பொறுப்பைத் தான் எடுக்காமல் ஒன்ராறியோ வாழ் மக்கள் கல்விச் சார்பு உறுப்பினர்களின் முடிவை மாற்றி அமைக்க நிர்ப்பந்திக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

30 வருடங்களுக்கு முன்பு தேசிய இந்திய இனத்தவருக்காக ஒரு பாடசாலை இங்கு ஆரம்பிக்கப்பட்டது. இது பெரும் தோல்வியாக முடிந்ததாக Julian Falconer தெரிவித்துள்ளார். கறுப்பு இன மாணவர்களுக்கான பாடசாலையில் ஆபிரிக்க விடயங்களால் மெருகூட்டப்பட்ட ஒரு கலைத்திட்டம் (Ontario Curriculum enhanced by Africentric materials) போதிக்கப்படும் எனக் கூறுகிறார்கள். அதாவது



**கனகேஸ்வரி நடராஜா**
ஆசிரியர், இலங்கை-கனடா

கறுப்பு இனத்தவரின் வரலாறு, பாரம்பரியம், பெரியார்கள் வரலாறு, கொண்டாட்டங்கள் பற்றிக் கற்பதால் இப் பிள்ளைகளுக்கு தமது பாரம்பரியம் பற்றிய பெருமையும், ஆவலும் ஏற்படும் என்றும் அதனால் இவர்கள் நன்றாகச் செயல்படுவார்கள் என்றும் இதற்குச் சாதகமானவர்கள் கூறுகிறார்கள். அத்துடன் கறுப்பு இன பெரியார்களின் வரலாறுகளைக் கற்பதன் மூலம் அவர்களின் வாழ்க்கை இவர்களுக்கு ஒரு முன்மாதிரியாக (Role moel) அமையும் என்றும் கூறுகிறார்கள். இதனை எவ்வளவு தூரம் ஏற்றுக் கொள்ளலாம் என இதற்கு பாதகமாக வாக்கு அளித்தவர்கள் வாதாடுகிறார்கள். ஏற்கனவே இவர்கள் நெல்சன் மண்டேலா, மார்ட்டின் லூதர் கிங் முதலிய ஆபிரிக்கப் பெரியவர்கள் பற்றி வேறு பாடங்களில் கற்றுள்ளனர். அதன் தாக்கம் இவர்களுக்குப் பெரிதாகத் தாக்கத்தை ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை. இக் கலைத்திட்டம் பரீட்சார்த்தகரமாக (experimental) இப் பாடசாலையில் கற்பிக்கப்பட்ட பின்பு இதனை ஒன்ராறியோவிலுள்ள சகல பாடசாலைகளிலும் புகுத்தலாம் என்பது இவர்கள் வாதம். இவ்வாறு ஒரு மாற்றம் ஏற்பட 30-50 வருட கால அவகாசம் தேவைப்படலாம், ஆனால் அது வெற்றியளிக்கலாம் எனபது கூட ஐயத்துக்கு இடமானது என கல்வியாளர்கள் கருதுகிறார்கள்.

மார்ட்டின் லூதர் கிங்கின் -"எனக்கு ஒரு கனவு உண்டு"- I have a dream என்ற பிரசங்கம் உலகளாவிய ரீதியில் பிரசித்தி பெற்றது. அவரின் கனவு யாதெனில் கறுப்பு இன பிள்ளைகளும், வெள்ளை இனப் பிள்ளைகளும் ஒருவரோடு ஒருவர் சகோதரங்கள் போல் கைகோர்த்து நிற்க வேண்டும் என்பதேயாகும் (Little Black boys & Little Black girls will be able to join hands with little white boys and little white girls as sisters and brothers) எந்த ஒன்றிணைந்த கல்வி கற்கும் சூழலுக்காக பல தலைவர்கள் பாடுபட்டார்களோ அந்த நோக்கம் கறுப்பர்களுக்கெனத் தனிப்பாடசாலை அமைப்பதன் மூலம் தவிடுபொடியாகப் போகிறது. ஒரு காலத்தில் தனிமைப்படுத்தப்பட்ட நிலை காணப்பட்டு (Segregation) பின்பு ஒன்றிணைந்த கல்விச் சூழல் ஏற்பட்டு இப்பொழுது திரும்பவும் கறுப்பு இனத்தவர்கள் தனிமைப்படுத்தப்படப் போகிறார்கள் (De segregation). பலவிதமான சாதியினர் கல்வி கற்கும் பாடசாலைகளே வெற்றியளித்ததாக சரித்திரம் புகட்டுகிறது. மீளவும் தனிமைப்படுத்தும் நிலைமை ஏற்படுத்துவதன் மூலம் முன் வைத்த காலை கறுப்பு இனத்தவர்கள் திரும்பவும் பின் வைக்கிறார்கள். பல்கலாசாரத் தில் கல்வி கற்கும் பொழுது பரந்த மனப்பான்மையும், விளக்கங்களும் ஏற்பட இடமுண்டு. தனிப்போதனை நடைபெறும் பொழுது மனவளர்ச்சிக்கு இடமில்லை (close mindedness). இத்தகைய ஒரு சூழல் பல்கலாசார நாடாகிய கனடாவுக்கு உகந்தது அல்ல. இது ஒரு விதத்தில் சமூக, பொருளாதார ரீதியில் பின்தங்கியவர்களை ஒரு இடத்தில் அடைப்பது போல் ஆகும் (Gheltoizing). உயர்ந்த வருமானம், மத்திய வருமானம், குறைந்த வருமானம் உள்ள எல்லாப் பிள்ளைகளும் ஒன்றாகக் கல்வி கற்கும் பொழுது பலவிதமான பிள்ளை களோடு வாழும் ஒரு வாழ்க்கைத் திறனை பிள்ளைகள் பெறுவதன் மூலம் அவர்களின் எதிர்காலத்திலும் பல்கலாசாரத்தவரோடும், பல நாட்டவரோடும் ஒன்றிணைந்து வாழவும், வேலை பார்க்கவும் பழகும் வாய்ப்பை சிறுவயதிலேயே விருத்தி செய்ய முடிகிறது.

கறுப்பு இனத்தவருக்கென ஒரு தனிப் பாட-சாலை அமைத்தால் அதனை தலைமைத்துவம் செய்வதற்கு மிகவும் திறமையும், ஆளுமையும் உள்ள பல ஆசிரியர்கள் தேவைப்படுவார்கள். கலைத் திட்டத்தை வகுத்தால் மாத்திரம் வெற்றியளிக்க மாட்டாது. அதனை கற்பிக்கவும், அதற்குரிய நோக்கங்களை

→

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கவிநாயகர் கந்தவனம் தரும்

## கனடியக் காட்சிகள்

# குடும்ப நாள்

தமிழர் தகவல் பதினேழாவது ஆண்டு விழா 17.02.2008 ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடந்தேறியது. வழமைபோல மலர் வெளியீடும் சாதனையாளர்களுக்கு விருதுகள் வழங்கிச் சிறப்பிக்கும் நிகழ்வும் நடந்தன. தமிழர் தகவல் குடும்பத்தவர் அவற்றைக் காண அந்தக் குளிரிலும் ஆர்வுடன் வந்திருந்தது குடும்ப உறவுக்கு நல்ல சான்று.

குடும்பத்தவர் என்றேனா?

18.02.2008 திங்கட்கிழமை ஒன்ராறியோவில் முதன்முதலாகக் குடும்ப நாள் கொண்டாடப்பட்டது. அதனைச் சிறப்பிக்கும் வகையில் தமிழர் தகவலின் பசுமையான பதினேழாவது அகவை மலரிலும் குடும்ப விழுமியங்கள் குறித்த கட்டுரைகள் பல இடம்பெற்றுள்ளன.

ஒன்ராறியோவில் 2007 தேர்தலை அடுத்து, வெற்றிபெற்ற லிபரல் கட்சித் தலைவர் டால்டன் மைக்கின்ரி அவர்களால் குடும்ப விடுமுறை 11.10.2007 அன்று அறிவிக்கப்பட்டது.

இதற்கு முன்னதாகவே அல்பேட்டா, சாஸ்கச்சுவான், மனிற்றோபா ஆகிய மூன்று மாநிலங்களிலும் குடும்பம் என்ற சொல் சூடுபிடிக்கத் தொடங்கிய சங்கதியையும் இங்கு நினைத்துப் பார்ப்பது பொருத்தமாக இருக்கும்.

கனடாவில் முதன்முதலாகக் குடும்பத்துக்கென்று ஒரு நாளை விடுமுறையாக்கிய பெருமை அல்பேட்டா மாகாணத்துக்கேயுரியது. அங்கு 1990ஆம் ஆண்டிலிருந்தே குடும்பநாள் விடுமுறையாக இருந்து வருகிறது. அதுவும் பெப்பிரவரி மாதம் மூன்றாவது திங்கள்தான். இந்த நாள் தெரிவுக்கும் அமெரிக்காவில் சனாதிபதி நாள் விடுமுறைக்கும் நெருங்கிய தொடர்புள்ளது. சனாதிபதி நாளும் பெப்பிரவரியில் வரும் மூன்றாவது திங்கட்கிழமையே யாகும்.

அடுத்து, குடும்பம் குதூகலிக்கத் தொடங்கியது சாஸ்கச்சுவானில். முதற் குடும்ப விடுமுறை 2007ஆம் ஆண்டு பெப்பிரவரி 19ஆம் நாள் கொண்டாடப்பட்டது. இவ்வாண்டு அது பெப்பிரவரி 18ல் அனுட்டிக்கப்பட்டது என்பது சொல்லாமலே போதரும்.

மனிற்றோபாவில் 17.04.2007ல் விடுமுறை பிரகடனப்படுத்தப்பட்டது. முதன்முதலாக குடும்ப நாள் அங்கு இவ்வாண்டு பெப்பிரவரி 18ஆம் நாளில் குதூகலிக்கத் தொடங்கியது. எனினும் குடும்ப நாள் அங்கு Louis Riel Day என அழைக்கப்படுகின்றது. உலூயி இரியேல் என்பவர் மனிற்றோபாவின் தந்தை எனப் போற்றப்படுகின்றவர். தந்தையின் பெயரால் அங்கு குடும்பச் சிறப்புகளுக்கு மதிப்பளிக்கப்படுகின்றது.

குவிபெக்கில் குடும்பநாள் இன்னும் இல்லை. அதனால் அங்கு குடும்பங்கள் சீராக நடைபெறுகின்றன என்று எண்ணத் தோன்றுகிறது. ஏனென்றால் ஒன்றன் முக்கியத்துவத்தை வலியுறுத்தத்தானே அதன் பெயரால் நாட்கள் அறிவிக்கப்படுகின்றன. நாட்கள் என்ன? ஓர் ஆண்டையே (2008ஐ) ஐக்கிய நாடுகள் சபை உருளைக் கிழங்குக்கு ஒதுக்கியிருக்கிறது. நோக்கம் அதன் உற்பத்தியைப் பெருக்கிப் பல நாடுகளின் வறுமையைப் போக்குவது.

தாய்மொழிக்கும் ஒரு நாள் உண்டு. விவரங்களுக்குத் தமிழர் தகவல் 17ஆவது மலரில் 30ஆம் பக்கத்தைப் பார்க்க.

குடும்பம் என்றால் தாய் தந்தை, கணவன் மனைவி, பிள்ளை குட்டி, அண்ணன் தம்பி, அக்காள் தங்கை, மாமன் மாமி, மச்சாள் மச்சான் மட்டுமல்லர். அதன் பொருளும் இக்காலத்தில் விரிந்து வருகின்றது. ஏனென்றால் உலகம் மிக வேகமாகவே சுருங்கி வருகின்றது.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்.'

## கறுப்பு இன..

அடையவும், மாணவர்களை சிறந்த முறையில் வழிநடத்தவும் சிறப்பான ஆசிரியர்கள் வேண்டும். கறுப்பு இனத்தவருக்கென ஒரு தனிப் பாடசாலை ஏற்படுத்தினால் அதில் கல்வி கற்பிக்க திறமைசாலிகளான எத்தனை ஆசிரியர்கள் முன்வருவார்கள் - கறுப்பு இன ஆசிரியர்களில் கூட எத்தனை பேர் முன்வருவார்கள் என்பது தெரியவில்லை. வட கரலீனாவில் சார்லெட் என்னும் இடத்தில் கறுப்பு இனப் பிள்ளைகளைப் பெரும்பான்மையாகக் கொண்ட (85%) பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. 1970களில் இது பெரும் வெற்றியளித்தது. ஆனால் காலப்போக்கில் இது ஒரு மிகவும் தரம் குறைந்த பாடசாலையாக மாறியதாக சரித்திரம் கூறுகிறது. பொதுவாக கறுப்பு இனத்தவரின் பொருளாதாரம் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகிறது. ஆகவே இப் பாடசாலை மாணவர்களும் வறுமையிலேயே வாழ்ந்தனர். இவர்களை ஊக்குவிக்கும் வகையில் காலை உணவு, மாலையில் விசேட தனிப்போதனை இன்னோரன்ன மேலதிக உதவிகளை பாடசாலையே செய்ய வேண்டியிருந்தது. அதாவது பெற்றோர் செய்ய வேண்டிய பல பொறுப்புக்களை பாடசாலை ஏற்றுக் கொண்டது. இவ்வாறெல்லாம் இங்கும் செய்ய முடியுமா, அப்படியென்றால் எவ்வளவு காலத்துக்குத்தான் செய்ய முடியும் - இவையெல்லாம் தொலைநோக்குடன் சிந்திக்க வேண்டிய விடயங்கள்.

கறுப்பு இனத்தவருக்கென தனிப் பாடசாலை அமைப்பது வேறு ஒரு புதுப் பிரச்சனையை இந் நாட்டில் உருவாக்கப் போகிறது. வேறு இனத்தவர்களும் இதனை மேற்கோள் காட்டி தங்களுக்கும் தனிப்பட்ட பாடசாலை வேண்டும் என கோர இடமுண்டு (Israelicentric schools, Punjabicentric schools). இப்பொழுது ஆரம்பிக்கப்பட இருக்கும் கறுப்பு இன பாட-சாலை கரீபியன் இன மாணவர்களை மனதில் கொண்டே பேசப்படுகிறது. கறுப்பு இனம் என்று சொல்லப்படும் பொழுது அதில் கறுப்பு சோமாலி இனம், கறுப்பு ஜமேக்க இனம் (Black Somali Canadians, Black Jamaican Canadians) எனப் பலவகைப்பட்ட கறுப்பு இனத்தவர்கள் காணப்படுகிறார்கள். ஆகவே இச் செயல் கறுப்பு இனத்தவர்களுக்கிடையே பிரிவினையை ஏற்படுத்த இடமுண்டு. சாதிகளின் அடிப்படையில் பாடசாலைகளை ஆரம்பிப்பது இனத்துவேஷத்திற்கு முதற்படியாக அமையலாம். மேற்கூறிய காரணங்களை நோக்கும் பொழுது கறுப்பு இனத்தவருக்கென ஒரு பிரத்தியேகப் பாடசாலையை ஆரம்பிப்பது முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டியதும், எல்லோராலும் எதிர்க்கப்பட வேண்டியதொன்றாகும்.

கறுப்பு இன மாணவர்கள் 40% பாடசாலையை இடையில் விட்டு விலகுவதற்கான அடிப்படைக் காரணம் என்ன? இது இவர்களின் வீடுகளிலேயே காணப்படுகிறது. தனிப் பெற்றோரின் கட்டுப்பாடற்ற வாழ்க்கை, கீழ்மட்டப் பொருளாதார நிலை, தந்தை ஸ்தானத்தை வகிக்கும் ஒரு குடும்பத் தலைவனின் சிறப்பான உதாரணம் இன்மை, இவை யாவும் இவர்கள் பாடசாலையில் தோல்வியுற காரணங்களாக அமைகின்றன. இவைதான் காரணம் என்பதை கறுப்பு இனப் பெற்றோர்கள் ஏற்றுக் கொள்ளும் மனநிலையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இதனை திருத்தாது, தனிப் பாடசாலை அமைத்து பரிகாரம் தேடுவது, நோய் இருக்க, அறிகுறிகளுக்கு வைத்தியம் செய்வது போலாகும் (Treating the symptoms and not the disease). கல்வியியலாளரும், சமூகவாதியுமான Lennox Farell என்பர் “கறுப்பு இன பிள்ளைகள் பாடசாலையில் வெற்றியடையவில்லை என்று ஒரு காலத்தில் கூறினோம். ஆனால் இப்பொழுது கறுப்பு இன பிள்ளைகள் மரணம் அடைந்தபடி இருக்கிறார்கள்” - இது ஏன் என்று பிரலாபிக்கிறார் - Back then we used to ask - “Why are Black kids failing. Now it is why are they dying” - இதற்கு விடை என்ன-!!!?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னாள் அதிபரின் மூன்று நூல்களின் அறிமுக அரங்கேற்றம்

தெல்லிப்பளை மகாஜன கல்லூரி. புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி ஆகியவற்றின் முன்னாள் அதிபரும், தமிழர் தகவலின் மூத்த எழுத்தாளரு மான திரு. பொ. கனகசபாபதி அவர்களின் மூன்று நூல்களின் அறிமுக அரங்கேற்றம் இந்த மாதம் 16 திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5:30 மணி முதல் கனடா கந்தசாமி கோவில் அலங்கார மண்டபத்தில் நடைபெற உள்ளது. மனம் எங்கே போகிறது, திறவுகோல் ஆகிய இரண்டும் கட்டுரைத் தொகுதிகள், மணிமாறன் கதைகள்-2 கதைகளின் தொகுதி. மனம் எங்கே போகிறது தொகுப்பில் தமிழர் தகவலில் எழுதப்பெற்ற பல கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. ஜேர்மனி வெற்றி மணியில் வெளியான கட்டுரைகளின் தொகுப்பு திறவுகோல். இந்த மூன்று நூல்களுக்குமான வெளியீட்டு/அறிமுக விழாக்கள் ஏற்கனவே ஐரோப்பிய நாடுகளிலும், கொழும்பிலும் நடைபெற்று ள்ளன. திரு. கனகசபாபதி அவர்களால் தமிழர் தகவலில் எழுதப்பெற்ற பல கட்டுரைகள் தொகுக்கப் பெற்று, ‘அதிபர் ஒருவரின் கூரிய பார்வை’, ‘பெற்றோர்-பிள்ளைகள்-உளவியல்’ என்னும் பெயர்களில் கனடா அகிலன் அசோஷியேற்ஸ் நிறுவனத்தினால் வெளியிடப்பெற்றது குறிப்பிடத்தக்கது. மூன்று நூல்களின் அரங்கேற்ற வைபவம் தொடர்பான மேலதிக விபரங்களை 416 283 1544 இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெறமுடியும்.

## பனி விழும் நகர்வனம்!

கடந்த நவம்பர் மாதத்திலிருந்து, கிட்டத்தட்ட 150cm அளவான பனி ரொறன்ரோ நகரெங்கும் பொழிந்துள்ளது. இதே ரீதியில் போனால் பனிக்காலம் முடிவதற்குள் பொழியும் பனியின் அளவானது, 1938-39 வருட பனிக்காலத்தில் பொழிந்த இதுவரை அதிகூடிய அளவாகக் கணிக்கப்பட்ட 207cm இனை தாண்டி, பதிவில் இடம்பெறக்கூடும்.



பொன்னையா விவேகானந்தன்

**பொன்னின் பொழிகை**

தொடர் 13

## வலை

வலையை வீசிப் பார்த்தாலும், வலை பற்றி யோசித்துப் பார்த்தாலும் அகப்பட்டு விடுகின்றன பல அர்த்தங்கள்.

பசிக்காக சில உயிர்களைப் பிடிக்க வலை விரித்தான் ஆதி மனிதன். கால ஓட்டத்தில் விரிந்தன வலையின் ஆழங்கள்.

மலைமலையாய் குவிந்து கிடக்கிறது உலகெங்கும் வலையின் வடிவங்கள்.

ஆசைப்பட்டதை வசப்படுத்தித் தரும் வலையின் அர்த்த நேர்த்தியில் கட்டுண்ட உலகம் தனக்குள் அகப்பட்டாக வேண்டும் எனக் கருதியவற்றிற்கெல்லாம் வலை விரிக்க வலையோடு உலாவ ஆரம்பித்தது.

கையிலும் தோளிலும் வலை சுமந்த மனிதம் கண்களிலும் கனவுகளிலும் வலை கொண்டது.

இந்தப் பூமியே ஒரு வலையிலானதா?
வாழும் அனைவரும் இந்த வலைக்குள் சிக்கியவர்களா? ஆயின், வாழ்வே ஒரு வலையா? வலைக்குள் சிக்கியிருந்தபடிதானா இத்தனை வலைகளையும் பின்னுகிறான் மனிதன்.

அடைய விரும்பியதற்கு அதிகமாய் வலை வீசுகின்றவன் ஆசை என்ற வலைக்குள் சிக்கியவன்தான். வகைவகையாய் வலைகள் செய்து வைத்திருக்கிறான் மனிதன்.

அன்புநூல் கொண்டு செய்த ஒரு வலை.
அதிகார நூல் கொண்டு நெய்த மற்றுமொரு வலை.
பயத்தால் பின்னப்பட்ட பிறிதொரு வலை.
பக்தி வழிப்பட்ட பரவச வலை.
பெண்ணென்றும் ஆணென்றும் உருவான பாலின வலை.

சில வலைகள் பட்டினால் ஆனவை. சில பருத்தியினால் ஆனவை.
வேறு பல வண்ண முகத்தாலான அழகு மிக்கவை.

இப்படி நீண்டு விரிகின்றது வலையின் வகைகள்.

சிறியதாய், பெரியதாய் அவரவர் சக்திக்கு ஏற்ப வலை பின்னிவிட்டு இரைக்காகக் காத்திருக்கும் சிலந்திகளாய் வாழ்கின்றனர் மனிதர்.

பெரும்பாலும் பெரிய சிலந்திகளே வலையோடு இரையாக்கி விடுகின்றன சிறிய சிலந்திகளை.

பெரிய வலைகளுக்குள் சிக்கிக் கிடந்தபடியேதான் நாம் சின்னச் சின்ன வலைகளைப் பின்னிக் கொண்டிருக்கின்றோம் என்பதை பலரும் அறிந்திருப்பதில்லை.

வலைகளைச் சுமக்காதவனும் வலைகளில் சிக்காதவனும் உலகில் இல்லை.. கடவுள் உண்டு என்பவன் கையிலும் வலை. இல்லை என்பவன் கையிலும் வலை. ‘வாழ்ந்து பார்’ என்பவனும் வலை வீசுகின்றான். ‘வாழ்வைத் துற’ என்பவனும் வலை வீசுகின்றான்.

வலைகளை அறுத்து தப்ப வேண்டும் என நீதிக்கதைகளை உருவாக்கிய மனிதம் தான் தப்ப வழியைக் கண்டுபிடித்ததா?

‘தப்ப வழியே இல்லை’ என்கிறது உலக வழக்கியல்.
‘தப்பலாம் முயன்று பார்’ என்கிறது வேதாந்தவியல்.

வலைகளை அறுத்து வெளியேறியதாய்ச் சிலர் கூறுகின்றனர். உடலெனும் வலை அறுத்தால் மட்டுமே உண்மை பேசலாம் என்கின்றனர் வேறு சிலர்.

வலைகளால் பின்னப்பட்டது வாழ்வு. வலையின்றி வாழ எந்த மனிதனாலும் முடிவதில்லை.

சிக்கும் வலையின் அளவு, சுமக்கும் வலையின் கனம் இவையே இன்ப துன்பங்களில் தளமாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். ஜெகதீசன் எழுதும்
பத்தாம் பக்கம்

# நலமாக நீர்

மூக்கு ஙண ஙணங்கிறது. காது ஙொய் ஙொய்ங்கிறது என குளிரால் பாதிப்படைந்தவர்யாராவது சொன்னால் நன்றாக பச்சைத்தண்ணீர் பருகுங்கள் எல்லாமே சரிவரும் என்று யாரும் சொல்வதில்லை .

ஏனெனில் செயற்கையான 'சிரப்'புகள் பெருக்கெடுக்க இயற்கையான சிறப்புகள் வற்றி விட்டன. தும்மினால் Tablet இருமினால் Capsule காய்ச்சல் என்றால் Syrup என்றே பழக்கப்பட்டதனால் தண்ணீரின் மருத்துவத்தை எவரும் உணர்வதுமில்லை அதன்மகத்துவத்தை யாரும் பேணுவதுமில்லை.

தண்ணீர் சிகிச்சை ஒரு சிக்கனமான வைத்தியம். முறையான இச்சிகிச்சை-யால் நிச்சய குணம் ஏற்படுவதற்கு அறிவியல் ஆய்வுகள் மூலமாகவும் அனுபவபூர்வ மாகவும் சான்றுகள் பல உள. தவிர இச்சிகிச்சையால் எவ்வித பக்கவிளைவு களோ அல்லது மன உளைச்சல்களோ பின்னர் ஏற்படுவதுமில்லை.

தண்ணீர் பரிகாரத்தால் மலச்சிக்கல் ஏப்பம் வயிறு உப்புசம் போன்றன ஒரு நாளில் மறையுமாம். வயிற்றுப்பித்தம் குடற்புண் ஆகியன ஒரு வாரத்தில் அகலுமாம். இரத்த அழுத்தம் ஒருமாதத்தில் சீராகுமாம். புற்று நோய் கூட ஒரு வருடத்துள் அற்றுவிடுமாம். தலைவலி – அதிகஎடை - ரத்தசோகை-வாதசோகை- நீரிழிவு பக்க வாதம்-இதயக்கோளாறு - ஆஸ்துமா-கோழை - இருமல் கசரோகம்-மூளைக்காய்ச்சல் - ஈரல்நோய்கள்-முறையற்ற இரத்தப்போக்கு வெள்ளைபடுதல் - கருப்பை வியாதிகள் - மூலம் - கண் வருத்தங்கள் என சர்வ ரோக நிவாரணி இயற்கையாக கிடைக்கும் சுத்தமான துாய தண்ணீர் என்பதும் நாம் அறிந்திருக்கவேண்டிய தகவலாகும்.

காலையில் எழுந்தவுடன் 1200 லீட்டர் நீரை ஒரே முறையில் குடித்துவிட வேண்டும். அதாவது ஐந்து அல்லது ஆறு தம்ளர் நீரை இப்படி இடைவிடாது பருகல் வேண்டும். இதன் பின்பு தான் பல் துலக்கி முகம் கழுவ வேண்டும். தண்ணீர் குடித்தபின் சுமார் இரண்டு மணித்தியாலங்கள் கோப்பி – தேநீர் – கோலா - யூஸ் என வேறு எந்த விதமான பானங்களையும் பருகக்கூடாது. சிறுதீனிகள் - நொறுக்குத்தீனிகள் உட்பட எவற்றையும் உண்ணவும் கூடாது. முதல்நாள் இரவு நித்திரைக்குச் செல்லமுன் நரம்பை துாண்டும் உற்சாக பானங்களை முற்றாகத் தவிர்த்தல் அவசியமாகும். துயில்வதற்கு இரு மணிநேரம் முன்னதாக உணவு உட்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.

1200 லீட்டர் நீரை ஒரே தடவையில் குடிப்பது ஆரம்பத்தில் சிரமமாக இருந்தாலும் துளித்துளியாக அது பழகிவிடும். தொடக்கத்தில் முழு அளவையும் உபயோகிப்பது கடினமாகத் தோன்றிடின் குடிக்கக்கூடிய அளவை குடித்து விட்டு சுமார் மூன்று நிமிடங்கள் வரைவேகமாக நடந்துவிட்டு மிஞ்சியுள்ளதை குடிக்கலாம் எனவும் ஒரு சிறு சலுகை உண்டு. சில நாட்கள் அடிக்கடி சிறுநீர் கழிக்க நேரிடினும் ஒரு வாரத்துக்குள் அந்த நிலைமை மாறி இயல்பு நிலை மீண்டிடும்.

நாம் குடிக்கும் தண்ணீர் குடற்பகுதிக்குச் சென்று சுத்திகரிப்புச் செய்ய கணையம் போன்றவை புத்துணர்வுபெற்று புது இரத்தம் சுரந்திட வழி கோலுகின்றன என்பதுதான் இந்த மருத்துவ சூட்சுமம்.

தண்ணீர் அதிக அளவில் குடிப்பதை வழக்கமாக்கிக் கொள்ளும் நோயாளி பூரண சுகமடைந்த பின்னரும் மீண்டும் அதே நோயால் தாக்கப்படமாட்டார் என்றும் அறிக்கைகள் அறிவிக்கின்றன.

தண்ணீர் எங்குமே விளம்பரப்படுத்திக்கொள்வதில்லை என்பதனால் அதன் மகிமையை யாரும் புரிந்துகொள்வதில்லை

## ரி.ரி.சி.யின் கட்டணம் குறைக்கப்பட்ட மாத அட்டைகள்

ரொறன்ரோ பகுதியைச் சேர்ந்த உயர்கல்வி மாணவர்களுக்கும், சொகுசு தங்குவிடுதி ஊழியர்களுக்கும் பெருந்தொகைக் கொள்வனவின் மூலம் கட்டணத்தை குறைத்து மாதாந்த போக்குவரத்து அட்டைகளை வழங்க ரொறன்ரோ போக்குவரத்துச் சபை தீர்மானித்துள்ளது.

பல வருடங்களாக இதற்கான பேச்சுவார்த்தைகளை பலதரப்பட்ட உயர் கல்வி வளாகங்களுடனும் ஆலோசித்து வந்துள்ளது. இதன் முதற்கட்டமாக, ரொறன்ரோ பல்கலைக்கழகத்தின் ஸ்காபரோ வளாகத்தினர் ரொறன்ரோ போக்குவரத்துச் சபைக்கு ஆதரவினை வழங்கவுள்ளதாக போக்குவரத்துச் சபையினர் தெரிவித்துள்ளனர்.

U-pass எனப்படும் இந்த மாதாந்த அட்டையின் கட்டணம், எல்லா 10,000 மாணவர்களுக்கும், மாணவர்களின் கட்டணத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டிருக்கும்.

## கனடிய இராணுவ வீரருக்கு மரியாதை! அவரது குழந்தைகளுக்கு நிதியுதவி!

அதிகரித்து வரும் கடமையில் உயிர் துறந்த தேசிய இராணுவ வீரரின் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளில் மூவர் முதன் முறையாகப் புதிதாகத் தொடங்கப் பெற்ற புலமைப் பரிசில் திட்டத்தின் மூலம் பயன் பெறுகின்றனர். இந்தப் புலமைப் பரிசில் திட்டமானது தேசிய இராணுவத்தினருக்கு சமூகம் வழங்கும் பக்கபலத்திற்கு ஓர் அடையாளமாகத் தொடங்கப்பட்டுள்ளது.

The Canada Company fund எனும், கனடாவின் மிகப் பெரிய தொழிலதிபர்களின் உதவியுடன் செயற்படுத்தப்படும் புலமைப் பரிசில் திட்டமானது, கடமையிலிருக்கும் போது தமது வாழ்வை நாட்டுக்காக அர்ப்பணித்த பெற்றோரின் பிள்ளைகளுக்கு உதவி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்தாளர் சுஜாதா 73 வயதில் மரணம்

பல்துறை எழுத்துகளால் புகழ்பெற்ற எழுத்தாளர் சுஜாதா 73 வயதில் கடந்த மாதம் 27 திகதி சென்னை அப்போலோ மருத்துவமனையில் மரணமானார். இயற்பியல் பட்டதாரியான இவர், தொழிலால் இலந்திரவியல் பொறியியலாளர். இத்துறையில் பல வருட அனுபவம் பெற்றவர் டில்லியில் அகில இந்திய வானொலியிலும் சில வருடங்கள் பணியாற்றியுள்ளார். ரெங்கராஜன் என்ற இயற்பெயர் கொண்ட இவரது மனைவியின் பெயர் சுஜாதா. மனைவியின் பெயரில் எழுதிப் பிரபல்யமான ரெங்கராஜனின் நெருங்கிய நண்பர், இந்திய முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம். தமிழகத் தயாரிப்புகளான இந்தியன், முதல்வன், Boys, அந்நியன், சிவாஜி, இருவர், ஆயுத எழுத்து, கன்னத்தில் முத்தமிட்டால் ஆகிய திரைப்படங்களின் இயக்கத்தில் இவர் இணைந்து பணியாற்றியது பலருக்கும் தெரியாதது.

## மகாஜன சங்க முத்தமிழ் விழா

கனடாவில் இயங்கும் தெல்லிப்பளை மகாஜன கல்லூரியின் வருடாந்த முத்தமிழ் விழர இந்த மாதம் 15 திகதி சனிக்கிழமை பிற்பகல் 5:15 மணி முதல், ஸ்காபரோ வின்சன்ட் சேர்ச்சில் கல்லூரி அரங்கில் நடைபெறவுள்ளது. வாத்திய இசை, நடனம், நாடகம், வில்லிசை உட்படப் பல கலை நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

## ஜோன் கிரட்சியனுக்கு அதியுயர் விருது!

கனடாவின் முன்னைய பிரதம மந்திரியான ஜோன் கிரட்சியன் அரசியலில் அதியுயர் விருதான Companion of the Order என்னும் விருதினை கடந்த மாதம் பெற்றிருக்கின்றார். 40 வருட அரசியல் வாழ்விற்காக இதனைப் பெற்றுள்ளார். இந்தக் காலத்தில் மூன்று முறை அதிக வாக்குகளால் வெற்றி பெற்ற அரசாங்கத்தை அமைத்தவராவார்.



குயின்ரஸ் துரைசிங்கம்

**கணினிப் பக்கம்** 20

# காக்க காக்க கணினி காக்க...

மின்னஞ்சல் முகவரி தயாராகி விட்டால், நீங்கள் இலத்திரனியல் தொடர்பு உலகிற்குள் கௌரவமாகக் காலடி எடுத்து வைத்து விட்டீர்கள் என்று அர்த்தம். வாழ்த்துக்கள்.

உங்கள் முகவரி சரியாக வேலை செய்கிறதா என்பதை ஒருமுறை பரீட்சித்துப் பார்ப்பது அவசியம். உதாரணமாக, நீங்கள் ஜிமெயில் முகவரியை உருவாக்கியிருந்தால், www.gmail.com என்ற இணையத் தளத்திற்கு சென்று, அங்கே உங்கள் முகவரியும் கடவுச்சொல்லும் உங்களை அனுமதிக்கிறதா என்பதை ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள்.

இயங்குகிறது என்று உறுதியானதும், உங்களது நெருங்கிய நண்பர்கள் உறவினர்களுக்கு உங்களது மின்னஞ்சல் (ஈமெயில்) முகவரியை வழங்குங்கள். a என்ற எழுத்தைச் சுற்றி வட்டமிட்ட புதிய எழுத்து, அற் (at) என்று அழைக்கப்படுகிறது என்று முன்பே பார்த்தோம் (@). மறக்காமல் அதை உபயோகியுங்கள். 'எனது அம்மம்மாவிடம் மூன்று ஈமெயில் அட்றஸ் இருக்கடா' என்று உங்கள் பேரப்பிள்ளை தனது நண்பர்களிடம் சொல்லி புளகாங்கிதமடையுமளவுக்கு, நீங்கள் ஒரு கலக்கு கலக்குங்கள். தொலைபேசியில் இளையவர்களுடன் கதைத்தால், ஏதும் விபரங்களைக் கூறும்போது, அவற்றை எனது ஈமெயிலுக்கு அனுப்பி விட முடியுமா என்று கேட்டு, அவர்களைக் கதிகலங்க வையுங்கள். நவீன உலகம், பழையவர்களைப் பலவீனமாக்கி விடவில்லை என்பதை, ஆதாரபூர்வமாகப் புரியவைக்க இலகுவான ஒரு வழியாக, ஈமெயில் முகவரி அமைந்துவிடுகிறது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

மின்னஞ்சல் மூலம் தகவல் அனுப்புவதற்கு விரும்பினால், எப்போதும் நீங்கள் உங்களது மின்னஞ்சல் இயக்கிக்கு சென்று அங்கே புதிய மின்னஞ்சல் அனுப்புவதற்கான கட்டத்தை அழுத்தி, உரிய தகவல்களைப் பதிவுசெய்த பின்னர், பெறுநரின் மின்னஞ்சல் முகவரியை இட்டு, 'போ' என்று சொடுக்கி விட்டால், ஒரு சில நிமிடங்களில் பெறுநரிடம் சென்று, அவரது பார்வைக்காக அந்த மின்னஞ்சல் காத்திருக்கும். இங்கே, தகவல்களைப் பதிவு செய்வது என்ற விடயத்தில் இரண்டு வழிகள் உள்ளன.

நேரடியாக மின்னஞ்சலைத் திறந்து வைத்துக்கொண்டு, அங்கே உடனடியாக விபரங்களைத் தட்டச்சு செய்து தகவலை அனுப்பி விடுவது ஒரு வழி. இந்த முறையைப் பாவிப்பதில் சில தீமைகள் இருக்கின்றன.
எழுத்துப் பிழைகள், சொற் பிழைகள், கருத்துப் பிழைகள் போன்றவை திருத்தப்படாமல் சென்றுவிட வாய்ப்பிருக்கிறது.
ஒன்றிற்கு மேற்பட்ட எழுத்துருக்களை (fonts) பாவிப்பதற்கு வாய்ப்புக்கள் மிகவும் குறைவாகவே உள்ளன.
எழுத்துக்களின் அளவை மாற்றுதல், மெருகூட்டுதல், கட்டம் தீட்டுதல், நிறம் மாற்றுதல், மையப் படுத்துதல், படங்களை அல்லது படவுருக்களை (icons) இணைத்தல் என்று, இன்னோரன்ன பல்வேறு செயற்பாடுகளும் கடினமானவையாகக் காணப்படும்.
தமிழில் எழுதுவதாக இருந்தால், நேரடியாக மின்னஞ்சலில் தட்டச்சு செய்யும்போது தமிழ் எழுத்துரு பற்றிய பிரச்சனைகள் எழலாம்.
எழுதிக் கொண்டிருக்கும்போது தற்செயலாக அல்லது தவறுதலாக அனுப்ப நேர்ந்துவிட்டால், சொல்லவந்த விடயம் பாதியிலேயே பெறுநரின் கைக்குக் கிட்டி, தேவையற்ற கருத்து மோதல்களை உருவாக்கி விடலாம்.

இத்தகைய தவறுகளைத் தவிர்ப்பதற்காக, எப்போதும் மின்னஞ்சலில் அனுப்ப விரும்பும் விடயத்தை, வேர்ட் (Word), பப்லிசர் (Publisher) அல்லது வேறு ஏதாவது உங்களுக்குப் பரிச்சயமான மென்பொருள் இயக்கியைப் பயன்படுத்தி, அவற்றில் தட்டச்சு செய்து, தவறுகளைத் திருத்தி, எழுத்துருக்களை சரியாக அமைத்த பின்னர், எழுதிய விடயத்தை அப்படியே பிரதி (copy) செய்து, மின்னஞ்சல் அனுப்பும் தளப் பகுதியில் ஒட்டி அல்லது பதிவிலிட்டால் (paste), அனுப்பப்படும் விடயம், மிகத் தரமானதாகத் தோற்றமளிக்கும்.

இப்படியான மின்னஞ்சல்களைத் தயாரிக்கும்போது, பாமினி (bamini) எழுத்துருவைப் பாவிப்பது பொதுவாக விரும்பப்படுகிறது. தற்போது யூனிக்கோட் எழுத்துரு பரவலாகப் பாவனைக்கு வந்துவிட்டதுடன், அனைவராலும் பரிந்துரைக்கப்படுகின்ற ஒன்றாகவும் இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எம்மைச் சுற்றி நடப்பவைகளிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட சில சம்பவங்களைக் காய்தல் உவத்தலின்றி எழுதும் இந்தப் பத்தி (column). அவ்வப்போது வெளிவரும். கண்டவை, கேட்டவை, நடந்தவையே இதன் மூலாதாரம். ஒருவகையில் பார்த்தால் இதுவும்கூட தகவல்தான்.*

# இது எப்பிடி இருக்கு?

## கனடியத் தமிழர்களுக்கு 'சிறி'லங்கா சிங்கள விருது

கனடியத் தமிழ் வானொலி (CTR) கடந்த மாத 22 திகதிய அரசியல் களம் நிகழ்ச்சி ஊடாக ஒரு முக்கிய விடயத்தை வெளிக்கொணர்ந்தது.

முன்பின் கேள்விப்பட்டிராத Can Indo Lanka என்னும் ஒரு சஞ்சிகை. ஒட்டாவாவிலுள்ள சிறீலங்கா தூதரகத்தின் அனுசரணையுடன் மார்ச் 15 திகதி ஒரு விருது விழாவை ரொறன்ரோவில் நடத்துகின்றது. இதற்குப் பெயர் Canada SriLanka Awatds.

விருதுகளை வழங்க, சிறீலங்காவின் இனவெறி அமைச்சர்களில் ஒருவரும், தமிழின விரோதியுமான அர்ஜுன ரணதுங்க வருகின்றாராம்.

விருதுக்குத் தெரிவான பலரும் கனடியத் தமிழர் என்று அரசியல் கருத்தாடலில் தெரிவிக்கப்பட்டபோது பலரும் அதிர்ச்சியடைந்தனர். சில வேடதாரிகள் அம்பலத்துக்கு வந்துள்ளதையும் நேயர்கள் சுட்டிக்காட்டினர்.

'குருதி தோய்ந்த கரங்களால் தமிழருக்கு விருது' என்றொரு கண்டன அறிக்கை மின்னஞ்சலில் பலருக்கு (தமிழர் தகவலுக்கும்) வந்துள்ளது.

சில வருடங்களுக்கு முன்னர் இங்கு வருகை தந்த 'விசு'வுக்கு நடந்ததைச் சிலர் நினைவுபடுத்துகின்றனர்.

## 'ஜெ'யும் சசிகலாவும் மாலை மாற்றினர்

தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் அறுபதாவது அகவை ஆரம்ப நாள் கடந்த மாதம் 24 திகதி. இவர் பிறந்த நட்சத்திரமான மகம், பெப்ரவரி 21ல் வந்தது.

நட்சத்திர பிறந்த நாளன்று திருக்கடவூர் ஆலயத்தில் பெரியளவில் சஷ்டியப்த வைபவம் ஏற்படாகியிருந்தது. 'ஜெ'யின் உயிர்த்தோழியான சசிகலாவின் குடும்ப உறவினர்களே இதனை முன்னின்று செய்தனர்.

எல்லாம் சரியாக நடக்கையில் ஒரு பிரச்சனை எழுந்தது. 'திருமணமாகாத ஒருவருக்கு சஷ்டியப்த அபிடேகம் நடத்தக்கூடாது' என்று ஆலய நிர்வாகி ஒருவர் குண்டைத் தூக்கிப் போட்டார்.

ஜெயலலிதா துவண்டு போகவில்லை. உடனடியாக இரு மலர்மாலைகளை வருவித்து, சசிகலாவும் தாமும் பகிரங்கமாக தம்பதிகள் செய்வது போல மாற்றிப் போட்டுக் கொண்டனர் ஆலய நிர்வாகி அத்துடன் 'கப்சிப்'.

குறிப்பு: ஜெயலலிதாவை இனியும் 'செல்வி' என அழைப்பது சரியா?

## நீ தான் ஜோ கிளார்க்கா? இந்தா, இதனைப் பிடி!

பழைய கன்சர்வேடிவ் கட்சியின் தலைவர்களில் ஒருவர் ஜோ கிளார்க். பிறைன் மல்றோனிக்கு முன்னர் சில காலம் கனடியப் பிரதமராக இருந்தவர்.

சில வாரங்களுக்கு முன்னர் ஒட்டாவா நகர வீதியொன்றில், பட்டப்பகலில் இவர் நடந்து செல்கையில்....

எதிரில் நடந்து வந்த ஒருவர், திடீரென் நின்று, அவரைப் பார்த்து 'நீ தான் முன்னாள் பிரதமர் ஜோ கிளார்க்கா?" என்று கேட்டார்.

மகிழ்ச்சிப் புன்னகையுடன் 'ஆம்' என்று பதிலளித்தார ஜோ கிளார்க்.

"இந்தா, இதனைப் பிடி' என்று சொன்ன அந்த மனிதர், முன்னாள் பிரதமரின் முகத்தில் ஓங்கி ஒரு அறை கொடுத்து விட்டு எதுவுமே நடக்காதது போலச் சென்று விட்டார்.

வீதியில் இதனைக் கண்டவர்கள் நகரக் காவலர்களுக்கு அறிவிக்க, சில நிமிடங்களில் அந்த நபர் கைதானார்.

என்ன, ஏன், எப்படி என்று எதுவுமே தெரியாது நின்றாராம் ஜோ கிளார்க்.

**உதாசனன் உலா விருந்து**

## நாய்க் கள்வர்களில் இவர்கள் தனி ரகம்!

ரொறன்ரோ நகரிலுள்ள வெதுப்பகம் (பேக்கரி) ஒன்றுக்குச் சென்ற வங்கி ஊழியர் ஒருவர், தமது செல்லப் பிராணியான நாய்க்குட்டியை வெளியே ஒரு தூணில் கட்டி விட்டுச் சென்றார்.

திரும்பி வந்து பார்த்தபோது அந்த அழகான 'பிறவுண்' நிற நாய்க் குட்டியை காணவில்லை யாரோ களவாடி விட்டார்கள்.

மறுநாள் ரொறன்ரே ஆங்கிலப் பத்திரிகையொன்றில் அவர் விளம்பரம் போட்டார். தமது நாய்க்குட்டியைக் கண்டு பிடித்துத் தருபவருக்கு - பதினையாயிரம் டாலர்கள் சன்மானம் என்று அதிலிருந்தது.

மறுநாளே இருவர் அவருடன் தொடர்பு கொண்டு, நாய்க் குட்டியைக் கண்டு பிடித்ததாகக் கூறி அவரிடம் எடுத்துச் சென்று கொடுத்து விட்டு, தமக்கான சன்மானத்தைக் காசோலையாக (செக்) வாங்கிச் சென்றனர்.

நகரக் காவலர்கள் சும்மாவா இருப்பார்கள்! அந்த இருவரையும், அவர்களின் கூட்டாளிகளான மேலும் இருவரையும் கைது செய்தனர்.

மூளையில்லாத நாய்க் கள்வர்களுக்கு தொலைக்காட்சிகள், வானொலிகள், பத்திரிகைகளில் நல்ல 'பப்ளிசிட்டி'. கனடாவில் இப்படியும் பிரபல்யமாகலாம் போலும்! நாய்க் கள்வர்களில் இவர்கள் தனி ரகம்.

## வீடு விற்பனை மோசடியில் த. முகவர்கள் சிக்கு?

வீடுகள் விற்பனை விடயத்தில் பல தமிழ் முகவர்கள் சிக்குண்டுள்ள செய்தி வெளிவந்துள்ளது.

தமிழர் ஒருவரின் தொழிற்சாலைக் கடிதத் தலைப்பில் வருமானக் கடிதங்கள் தயாரிக்கப்பட்டு சுமார் இருபது வரையான வீடுகள் விற்கப்பட்டுள்ளனவாம். இதில் வங்கிகளில் கடமையாற்றுபவர்களும் உடந்தையாக இருந்துள்ளனராம்.

கணிசமான தமிழரின் வீடு விற்பனை வங்கிக் கோவைகள் மீள்பரிசீலனைக்கு வெளியே எடுக்கப்பட்டுள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலை செய்யப்பட்ட தி. மகேஸ்வரனுக்கு கனடாவில் வணக்க நிகழ்வு

நிகழ்வின் பதிவு





இந்த வருட ஜனவரி முதலாம் திகதியன்று கொழும்பு சிறீபொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தில் வைத்து சிறிலங்கா அரச உளவாளிகளால் படுகொலை செய்யப்பட்ட கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி. மகேஸ்வரனுக்கு வணக்கம் தெரிவிக்கும் நிகழ்வொன்று கடந்த மாதம் 16 திகதி ஸ்காபரோ கந்தசாமி ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. கனடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒன்ராறியோ மாகாண சபை மற்றும் ரொறன்ரோ நகரசபை ஆகியவற்றின் உறுப்பினர்கள், தமிழர் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், மற்றும் இளையோர்களும் இவ்வைபவத்தில் உரையாற்றினர். மகேஸ்வரன் எம். பியின் மரணத்தின் 45வது நாளை முன்னிட்டு இங்கு அனைவருக்கும் திதி போசனம் வழங்கப்பட்டது. அமரரின் நாடாளுமன்ற உரைகள் சிலவற்றின் தொகுப்பு இறுவெட்டும் இங்கு வெளியிடப்பெற்றது.















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகாஜன அதிபர்
பொ. கனகசபாபதி

# இலங்கா தரிசனம் - நவரசம் -2

சங்கிலித் தொடர் போலக் கோழிகளின் கூவல்களை இப்போது எண்ணிய போதும் மனது பரவசத்தில் மிதக்கின்றதே. மணிவாசகப் பெருமான் சொல்லாதது ஒன்றும் எனது உள்ளத்தினை இதமாக வாட்டியது. இத்தனை ஓசை ஒலிகளும் என்னை ஆராட்டின என்பது உண்மை ஆனால் என்னை எழுப்பியது இவை அல்லவே. அந்த ஓசைகளின் சங்கமத்திலே ஒரு தேனினும் இனிய குரலொன்று தெளிவாக என் காதில் வந்து பாய்கிறதே. அது "தம்பி எழும்படா" என்ற வாஞ்சை யோடு நிறைந்த இன்குரல். என்னை ஈன்றவளின் இனிய ஏவலா அல்லது அந்தக் குயில் இன்னிசைக் கூவலா என்னை துயில் கலைந்து நாளாந்தம் எழச் செய்தன?

இம்முறை கொழும்பில் ஒரு நாளல்ல, இரு நாளல்ல தொடர்ச்சியாக அந்தக் குயிலின் இன்னோசை எனது காதுகளில் பாயவில்லை. ஏன் கேட்கவில்லை? எதனையோ இழந்த பரிதாப உணர்ச்சி ஏற்பட்டது. என்ன தான் நடந்திருக்கும்? இரண்டு நாட்களில் பத்திரிகையில் ஒரு செய்தி வந்தது. அதன் காரணமும் புரிந்தது. அந்தக் குயிலின் ரீங்காரம் கேட்காமை என்னை மாத்திரமல்ல பத்திரிகைக்காரர்களையும் பெரிதே துன்பத்தில் ஆழ்த்தியுள்ளது தெரிந்தது. அவர்கள் பட்சியியல் அறிஞர் (Ornithologist) வராகொடாவிடம் இது பற்றிக் கேட்டுள்ளனர். அவர் கூறிய விளக்கத்தை வாசித்த பொழுது, இழப்பு (தாயார்) ஏக்கம், சோகம், ஆதங்கம் எனும் கருணைக்கான அத்தனை ஸ்தாயி பாவங்களையும் என் உள்ளத்தில் கொண்டு வந்தன.

இப்போ கொஞ்சம் ஒரு சில வருடங்கள் பின் நோக்கிச் செல்வோமா? 'கீக்கீ' எனக்கத்தியபடி குயில் குஞ்சுகள் பரிதாபமாகப் பறக்க, ஆக்ரோசத்துடன் காகம் "கா, கா" என்றபடி கலைத்துக் கலைத்துக் கொத்தியதைக் கண்ட நினைவு வரவில்லையா? ஆம். குயில் தனது முட்டைகளைக் காகத்தின் கூட்டிலே இட்டுவிட்டுச் செல்ல காகம் தனது முட்டைகளுடன் குயிலின் முட்டைகளையும் அடை காத்து, பொரித்து உணவூட்டி வளர்த்து அவை குயில் குஞ்சுகள் என்றதை அறிந்ததும் தான் ஏமாற்றப் பட்டுவிட்டேன் என்றதால் வந்த கோபத்தை ஏதும் பிழைசெய்யாத அந்தக் குஞ்சுகளில் வஞ்சம் தீர்த்ததைக் கண்ணால் எத்தனை பேர்கள் கண்டிருப்பீர்கள்.

குயிற் குஞ்சு முட்டையைக் காக்கைக்கூட் டிட்டால்
அயர்ப்பின்றிக் காக்கை வளர்க்கின் றது போல்
இயக்கில்லைப் போக்கில்லை யேயென்ப தில்லை
மயக்கத்தால் காக்கை வளர்கின்றவாறே.

(திருமந்திரம் 488)
அயர்ப்பு - சந்தேகம்.

வராகொடா கூறிய விளக்கம் எனது ஏக்கத்திற்கான காரணத்தைப் புரிய வைத்தது. காகம் கூடுகட்டினால்தானே குயில் அங்கே முட்டை இடலாம். கொழும்பு மாநகரிலே நெடிய மரங்கள் யாவும் வெட்டப் பட்டு அடுக்கு மாடிக் கட்டிடங்கள் எழுந்துள்ளன. காகங்களுக்குக் கூடுகட்டுதற்கான உயர்ந்த மரங்களோ, மரச் சுள்ளிகளோ தட்டுப்பாடு ஏற்பட காகங்கள் நகரத்தை விட்டு கிராமங்களை நோக்கிப் புலம் பெயர்ந்து விட்டனவாம்.
"கூ, கூ" என்ற அந்த இன்னிசை ஆண்குயிலின் வாயிலிருந்தே வருகிறது. அதற்கு இரண்டு காரணங்கள். ஒன்று காதல் செய்வோம் வாரீர் என பெண்ணினத்துக்கு அழைப்பு. மற்றையது "இது என்னுடைய பிரதேசம் இங்கே வந்தால் தெரியும்" என ஏனைய ஆண்களுக்கான எச்சரிக்கை . ஆணின் லீலைக்கு உடன்பட்டால் முட்டையை எங்கே இடுவது என்ற பிரச்சினை பெண்ணிற்கு. ஆகவே அழைப்பு நிராகரிக்கப்படுகிறது. அழைப்புத் தொடர்ந்து நிராகரிக்கப் படுவதால் அழைப்பே நின்றுவிடுகிறது. "கூ கூ" இப்போ கேட்பதில்லை. ஆண் பாவம் பொல்லாதது.

இங்கிலாந்திலே நமது குயிலுக்குப் பதிலாக இன்னிசை பாடும் பறவை Nightingale என அழைக்கப் படுகிறது (Eurithacus rubecula) அழகாகப் பாடும் இந்த அற்புத பட்சி பகல் நேரங்களிலே தான் பாடும் வழக்கம் உடையது. பகல் நேரங்களிலே மட்டும் பாடி வந்த இந்தப் பறவை இப்போ இரவிலே பாடத் தொடங்கி உள்ளதாம். காரணம்? எல்லா நகரங்களும் ஒளிமயமாகி பகலிலும் பார்க்க இரவு ஜெகஜோதியாய் பட்டப்பகல் போல பட்டொளியுடன் பிரகாசிப்பதால் நைற்றிங்கேல் ஏமாற்றப்பட்டு விட்டதா? அல்லது எல்லோரும் வேலை வேலை எனப் பகல் முழுதும் அலைகிறார்கள் எனவே இரவு வேளைகளில் தான் தனது கானம் மக்களின் கவனத்துக்குப் போகும் நன்கு இரசிக்கப் படும் என்ற மனமாற்றத்தின் விளைவாலா?

(நன்றி: அயர்ப்பின்றிக் காக்கை வளர்க்கின்றது போல்" என்ற வாக்கியம் தவிர மிகுதி என் நினைவிலே எத்தனை முறை முயன்றும் வர மாட்டேன் என்றது. பலரைக் கேட்டேன் எல்லோரும் கேள்விப்பட்டது தான், எங்கே என்று தெரியவில்லை என்றார்கள். பேராசிரியர் சுப்பிரமணியன் இந்தியாவில், ஆகவே ஆழ்கடலானைத் தஞ்சமடைந்தேன். அவர் ஏமாற்றவில்லை. கேட்ட சிறிது நேரத்தில் தொலைபேசி மணி அடித்தது "திருமந்திரம் 488" என்றார். அவர் பேரறிஞரே)

3. **வீரம்:** வீரம் என்றவுடனே நம்மவர்களின் மனதில் தோன்றுவது ஆக்ரோசத்துடன் ஒருவரைப் போட்டு அடித்துப் புரட்டி எடுப்பது. அது எனக்குச் சுட்டுப் போட்டாலும் வராது. அதனால் தான் அந்த அப்பாவி மனுசர் பரத முனிவருக்குப் பின்னால் மறைந்து நிற்கிறேன். வீரரசத்தின் ஸ்தாயி பாவம் (மனநிலை – state of mind) உற்சாகம் என்கிறார் முனிவர். அது என்னிடத்தில் நிறையவே இருக்கிறது. வாழ்க்கையின் பல தோல்விகளைக் கண்டவன். ஆனால் அத்தனை தோல்விகளும் என் மன நிலையினைப் பெரிதளவில் பாதித்தாலும் மிக விரைவில் நான் மீண்டும் எழுந்து நின்றேன். பழைய உற்சாகம் மீண்டும் நிலவ உலா வந்தேன் என்பது என்னோடு பழகியவர்களுக்கு வெளிச்சம். ஆகவேதான் அதிக சமயங்களிலே உற்சாகத்துடன் இயங்குகின்றேன். நான் ஸ்ரீலங்கா செல்வது என்றதும் யாழ்ப்பாணம் செல்ல முடியாதே என்ற ஏக்கம் ஏற்பட்டாலும் கூட சின்ன யாழ்ப்பாணதில் ஒரு வாரம் தங்கலாமே, சில நாட்கள் சென்னையிலும் கழிக்கலாமே என்ற எண்ணத்திலேயே உற்சாகம் வந்து குவிந்து விட்டது.

இந்த வீரரசம் விடா முயற்சியுடன் செயலாற்றுதல், கட்டுப்பாடு, வலிமை, செயல்விளைவு போன்ற விபாவங்களால் ஏற்படுகிறது என்கிறார் பரத முனிவர். சென்னைக்குப் போவதானால் இந்திய அரசாங்கத்தின் நுழைவுரிமை (Visa) பெறவேண்டும். விசாரித்ததில், அதனைப் பெறுவதற்குப் பல புதிய நடைமுறைகள் ஏற்படுத்தப் பட்டுள்ளதாகக் கூறினார்கள். இந்திய அரசின் துணை ஸ்தானிகர் அலுவலகத்திற்கு நேரே போய் விண்ணப்பம் தர முடியாதாம், தபால் மூலம் தான் விண்ணப்பிக்க வேண்டுமாம். நுழைவுரிமை வழங்க ஒரு வாரம் அல்லது அதற்குமேல் எடுக்குமாம். தபால் மூலம் தான் அதனை அனுப்புவார்களாம் என்றனர் விபரம் தெரிந்தோர். இதென்னடா வில்லங்கம். இதற்கான அவகாசம் எனக்கு இருக்க வில்லை. கொழும்பில் உள்ள மருமகனிடம் பேசினேன். 'இங்கு வாருங்கள் மாமா. இங்கே முயற்சி எடுக்கலாம்' என்றான். போன உற்சாகம் மீண்டும் துளிர்விட்டது உண்மை. கொழும்பில் எனது நண்பர் ஈஸ்வரன் இரண்டு நாட்களில் நுழைவுரிமையை எடுத்துக் கைகளில் தந்து விட்டார். இது ஒன்றும் அற்புதமல்ல. அங்கே இவை சாதாரண நிகழ்ச்சிகள். கொஞ்சம் வெள்ளிப் பணம் தேவை. ஆனால் எனக்குத் தேவையாக இருக்கவில்லை. நான் கொழும்பு போகிறேன் என்பதை அறிந்த நண்பர் சிவநேசன்" இந்த நேரம் போகிறீர்களா"? என்றார். (26ம் பக்கம் வருக)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர் தகவல் பதினேழாவது ஆண்டு பூர்த்தி மலர்


# குடும்ப விழுமியங்களுக்கு முன்னுரிமை

### *கலாநிதி த. வசந்தகுமார் வெளியீட்டுரை*



தமிழர் தகவல் சஞ்சிகையின் நிரந்தர வாசகனாகிய எனக்கு அதன் 17வது ஆண்டுமலரின் வெளியீட்டு உரையை நிகழ்த்துவதற்குக் கிடைத்த வாய்ப்பினையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றேன். சந்தர்ப்பமளித்த பிரதம ஆசிரியர் திரு திருச்செல்வம் அவர்களுக்கும், விழாக்குழுவினருக்கும் முதற்கண் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தேடலும், பயணமும் மனிதகுலத்தின் இடையறாத இயக்கங்களாக என்றுமே இருந்திருக்கின்றன, இருக்கின்றன. பரந்து கிடக்கின்ற பூமிப்பரப்பிலே இயற்கையின் எண்ணற்ற இரகசியங்களைத் தேடியும், தமது வாழ்வுக்கு நிலைக்களன் தேடியும், கூட்டம் கூட்டமாக ஆதிகால மனிதனின் பயணங்கள் ஆரம்பமானது. மனித வரலாறு நாகரீகம், அறிவியல், பொருளாதாரம், வர்த்தகம் எனத்துறைகள் பல கண்டு, கண்டு வளர்ச்சி அடைய, பயணங்களும் பெருகின. திருப்தியடையாத மனித மனங்களின் ஆசைகள் மென்மேலும் விரிவடைய, ஆதிக்க உணர்வும், ஆக்கிரமிப்பில் ஆர்வமும் எழுச்சிபெற, பயணங்கள் புதிய பரிணாமம் கண்டன. நாடு பிடித்தலும் உலகத்தில் ஒரு நாகரீகமானது! அந்த நாகரீகத்தின் உச்சகட்டம் தான் இன்றைய உலகில் நாம் பார்க்கும் சதுரங்க ஆட்டம். அதன் விளைவு இந்தப் பூமியைப் போரின் வசப்படுத்தி, மக்களை புதிய தேடலையும், புலப்பெயர்வுகளையும் நோக்கிப் பலவந்தமாகத் தள்ளுகின்றது.



*தமிழர் தகவல் 17வது ஆண்டு பூர்த்தி வைபவம் கடந்த மாதம் 17 திகதி ரொறன்ரோ நகர மண்டப அங்கத்தவர் சபா பீடத்தில் நடைபெற்றது. முதல் அமர்வில் 17வது ஆண்டு மலர் வெளியீடு இடம்பெற்றது. கம்பியூட்டெக் நிறுவன அதிபர் கலாநிதி த. வசந்தகுமார் நிகழ்த்திய வெளியீட்டுரையின் முக்கிய பகுதி இங்கு இடம்பெற்றுள்ளது.*

ஈழத்தமிழரின் அமைதியான, நிம்மதியான, நம்பிக்கையான இயல்பு வாழ்க்கை ஆட்டம் காணத்தொடங்கி, ஆண்டுகள் 50 ஓடிவிட்டன! 58ம் ஆண்டிலே, கொழும்புத் தமிழர்களை ஏற்றியபடி வடக்குநோக்கி அந்தக் கப்பல் புறப்பட்ட கணத்திலேயே, பூமியின் அகன்ற நிலப்பரப்பிலே எங்கள் புதிய நகர்வுக்கு முதல் புள்ளி இட்டாயிற்று! இன்று 2008ம் ஆண்டு! இந்த 50 ஆண்டுகள் கழிந்த பொன்விழாக் கொண்டாட்டத்தினை நினைவுபடுத்தி, ஈழத்தமிழர் நெஞ்சிலும், வாழ்விலும் நெருப்பாய்க் கனிகின்ற அந்த நிகழ்வை நினைவுபடுத்தி, இந்த ஆண்டுமலரிலே கட்டுரைகள் வெளிவந்திருப்பது சாலப்பொருத்தமே!

83ம் ஆண்டு இரண்டாவது முறையாகத் தென்னிலங்கையில் நிகழ்ந்த இனவேட்டை, எமது இனத்தை நாட்டைவிட்டே ஓடும் நிலக்குத் தள்ளியது. ஏழுகடல் தாண்டி, ஏழுமலை தாண்டி எங்கெல்லாமோ எங்கள் சனங்கள் பயணஞ்செய்து கொண்டே இருக்கின்றார்கள். இன்று ஆண்டு 2008! கடந்த 25 ஆண்டுகளாகப் பயணம் தொடர்கின்றது! சொந்த நாட்டு வாழ்விலே மனஞ் சலித்துப்போனவர்களாக, நம்பிக்கை அற்றுப் போனவர்களாக, ஈழத்தமிழ் மக்களைப் பல்லாயிரக்கணக்கில் நாட்டை விட்டுத் துரத்திய, இலங்கையின் வரலாற்றில் கறையாகப் படிந்துபோன அந்த நிகழ்வின் வெள்ளிவிழாவும் இந்த ஆண்டிலேதான்! வரலாற்றுச் சோகங்களைக் காவி நிற்பதாய், ஞாபகமூட்டுவதாய், புலம்பெயர் மண்ணிலே வந்திறங்கியபோது ஆறுதலும், ஆதரவும் ஊட்டுவதாய், கனடா நீட்டிய நீண்ட கரங்களை ஞாபகமூட்டுவதாய் இந்த மலரிலே கட்டுரைகள் வெளிவந்திருப்பது, உங்களை அந்த நினைவுகளை நிச்சயம் மீட்டிப் பார்க்க வைக்கும்.


மனிதகுலத்தின் இடையறாத இயக்கங்களில் ஒன்று தேடல் என்று நான் ஏற்கனவே குறிப்பிட்டேன். கனடா வந்த நாம் அவசரம், அவசரமாக தொழில் தேடினோம்! பொருள் தேடினோம்! கல்வி தேடினோம். வீடு, வாசல், கார் தேடினோம்! இப்போதுதான் ஆற, அமர, நாம் தொலைத்தவற்றை, தொலைத்துக் கொண்டிருப்பவைகளை தேட ஆரம்பித்திருக்கின்றோம்! ஊருடனேயே தொலைந்து போய்விட்ட எமது உறவுகளுடன் அந்நியோன்னியமாகக் கூடி வாழ்ந்த குடும்ப வாழ்வு, அதன் விழுமியங்கள், அவற்றை எப்போது தொலைத்தோம் என்று தெரியாமலே மெல்ல, மெல்ல எதற்காகவோ காவு கொடுத்துவிட்டோம்.

புலம்பெயர் வாழ்வில் வாழ்வின் அவசரமும், கலாசாரப் புரளியும், அது தரும் அச்சமும், மனித உறவுகளுக்கிடையில் புகுந்துகொண்டு விரிசல்களை ஏற்படுத்திவிட்டன. கணவன், மனைவி, பெற்றோர், பிள்ளைகள், உறவுகள் ஏன் இவ்வளவு தூரம் பிறழ்ந்து போயின? நேரமின்மையா? கலாசார மாற்றமா? ஒத்த விடயங்கள் இன்மையா? காரணம் புரியவேயில்லை? இங்குள்ள குடும்பங்களிடையே வெகுவேகமாகப் பரவிவருவது, விவாகரத்து கலாசாரம். இதற்குக் காரணம் நாகரீகமா? எமது சமூக நெறிகளை கற்றுக்கொள்ளாத, கற்பிக்காத துர்ப்பாக்கியமா? இப்படியே எமக்குள்ளேயே புதைந்து கிடக்கும் பல கேள்விகள்! இதற்கான விடைகாண இம்மலரிலே மொத்தமாக 9 கட்டுரைகள் அதாவது முதல் 40 பக்கங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன. அதையடுத்து வழமைபோல் கலை, கலாசாரம், கல்வி, கணினி, சட்டம், தொழில்நுட்பம் போன்ற பல்துறைகளிலும் சிறந்த பல அறிஞர்களின் படைப்புக்கள் வெளிவந்திருக்கின்றன. இதில் மேலதிக சிறப்பு என்னவெனில் இதிற்பல கட்டுரைகளை தந்தை, தாய், மகன், மகள் மட்டுமல்ல கணவன், மனைவி, பிள்ளை என்ற ஒரு முழுக்குடும்பமே எழுதியிருக்கின்றது.

குடும்ப விழுமியங்களைச் சார்ந்த பல கட்டுரைகளைத் தாங்கிய இந்த குடும்பமலரை வெளியிட்டு வைக்கும் இச்சந்தர்ப்பத்திலே, இதை ஒவ்வொருவரும் குடும்பமாக வாசித்துப் பயன்பெற வேண்டுமென்ற நோக்குடனோ, என்னவோ, ஒன்ராறியோ மாநில அரசு நாளைய தினத்தை (18-02-2008) குடும்பதின விடுமுறையாகப் பிரகடனஞ் செய்துள்ளதென்பதையும் இங்கு குறிப்பிட்டு விடைபெறுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தமிழர் தகவல் 17வது ஆண்டு மாணவர் விருதுகள்

இந்த ஆண்டுக்கான மாணவர் சாதனை விருதுகளை ரொறன்ரோ ஜாவிஸ் கல்லூரி மாணவி அனோஜினி குமாரதாசனும், ஸ்காபரோ ஏஜின்கோட் கல்லூரி மாணவி லக்சுமி சிவனேஸ்வரலிங்கமும் பெற்றுக் கொண்டனர். பிரதம விருந்தினர் திரு. மைக் புரூ விருதினை வழங்க, மாணவ விருதுகளை 'ஸ்பொன்சர்' செய்த தொழிலதிபர் கண்ணன் துரைராஜா தங்கப் பதக்கங்கள் சூட்டினார். சமூகப் பிரமுகர்கள் மலர்ச் செண்டும், வாழ்த்து மடலும் வழங்கிச் சிறப்புச் செய்தனர். இரு மாணவிகளும் விருது பெறுவதையும், தம்மைச் சிறப்புச் செய்த பிரமுகர்களுடன் கூட்டாக நிற்பதையும் ஒளிப்படங்களில் காணலாம்.










விருதாளர்களும் பிரமுகர்களும் கூட்டாக நிற்கும் ஒளிப்படம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தமிழர் தகவல் 17வது ஆண்டு பூர்த்தி வைபவம்

தொடக்கவுரை குயின்ரஸ் துரைசிங்கம், தமிழ்த்தாய் வாழ்த்து அனோஜினி குமாரதாசன்
ஆசியுரை சிவசிறீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜ குருக்கள் வாழ்த்துரை முத்துராமன் இரஜீவிகரன்
தலைமையுரை நீதன் சண்முகராஜா சிறப்புரை லோகன் கணபதி
சிற்றுரை திரு எஸ். திருச்செல்வம் முதன்மை உரை நா. சிவலிங்கம்
விருதாளர் அறிமுகவுரை தாட்சா நவநீதன் முடிவுரை பேராசிரியர் ஜோ. சந்திரகாந்தன்






பிரதம விருந்தினர் உரை
மைக்கல் புரு எம்.பி.பி
கிழக்கு யோர்க் முன்னாள் மேயர்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# தமிழர் தகவல் 17வது ஆண்டு விருது வழங்கும் வைபவம்

தமிழர் தகவலின் 17வது ஆண்டு விருது வழங்கும் வைபவம் கடந்த மாதம் 17ம் திகதி ரொறன்ரோ நகர
தலைமையில் நடைபெற்றது. பேராசிரியர் ஜோ. சந்திரகாந்தன் (சமூக, சமய, கல்விப் பணி), வழக்கறி
திரு. க. நவம் (கலை இலக்கியம்), திரு. க. சுரேஷ்குமார் (வணிக முன்னோடி), திருமதி. எஸ். திரு
விருந்தினரிடம் விருதுகள் பெறுவதையும், தம்மைச் சிறப்புச் செய்த பி

ஒளிப்படங்கள்: கமல்

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Tamils' Information 17th Annual Awards Ceremony




மண்டப அங்கத்தவர் சபாபீடத்தில் மார்க்கம் நகர கல்விச் சபை உறுப்பினர் திரு. நீதன் சண்முகராஜா
றிஞர் மனுவல் ஜேசுதாசன் (பன்முகப் புலமை), டாக்டர். விக்டர் பிகராடோ (பல்துறை ஆளுமை),
நமகள் (வணிக முன்னோடி) ஆகியோர் வருடாந்த விருதுகளைப் பெற்றனர். விருதாளர்கள் பிரதம
ிரமுகர்களுடன் கூட்டாக நிற்பதையும் ஒளிப்படங்களில் காணலாம்.

கே. கமலலிங்கம்
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தமிழர் தகவல் 17வது ஆண்டு விருது வைபவ புரவலர்கள் (Sponsors) மதிப்பளிப்பு

**தமிழர் தகவல் பதினேழாவது ஆண்டு விருதுகள் வழங்கும்** வைபவத்தின் புரவலர்கள் (sponsors) அனைவரும் ஆதரவுச் சான்றுப் பட்டயம் வழங்கி மதிப்பளிப்புச் செய்யப்பட்டனர். பிரதம விருந்தினர் மைக்கல் புரூ பட்டயங்களை வழங்கினார். வழக்கறிஞர் ஹரி ஆனந்தசங்கரி, தொழிலதிபர்கள் கண்ணன் துரைராஜா, கே. சபேசன், முத்துராமன் இரஜீவிகரன் ஆகியோர் பட்டயங்களைப் பெற்றனர் அன்றைய தினம் சமூகம் கொடுக்காத மற்றைய புரவலர்களான வழக்கறிஞர்கள் யசோ சின்னத்துரை, மெலனி டேவிட், வீடு விற்பனை முகவர் செல்வா வெற்றிவேல் ஆகியோரின் பட்டயங்கள் பின்னர் அவர்களிடம் நேரடியாகக் கையளிக்கப்பட்டன.









## விருது வைபவ தன்னார்வத் தொண்டர்கள்

விருதுகள் வழங்கும் வைபவம் நேர்த்தியாகவும் சிறப்பாகவும் நேரக் கட்டுப்பாட்டுடனும் நிகழ்வதற்குப் பொறுப்பாக இருந்தவர்கள் மூன்று தன்னார்வத் தொண்டர்கள். அங்கை விமலநாதன், பிரியா குலசேகரம், நளாயினி பாலராஜன் ஆகிய மூன்று தொண்டர்களும் தங்கள் பணியை நிறைவு செய்யத் தயாராக நிற்பதை இங்கு பார்க்கலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

கனடிய கடவுச் சீட்டுகளின் (பாஸ்போட்) ஆயுட்காலத்தைப் பத்து வருடங்களாக அதிகரிக்க மத்திய அரசு தீர்மானித்துள்ளது. தற்போது கனடிய கடவுச்சீட்டின் ஆயுட் காலம் ஐந்து வருடங்கள் மட்டுமே. அதன் பின்னர் புதிய கடவுச் சீட்டையே பெறவேண்டும். புதிய பத்து வருட கால கடவுச்சீட்டு பற்றிய விபரங்களை அரசாங்கம் விரைவில் வெளியிடவுள்ளது. அனேகமாகக் கட்டண உயர்வு இருக்கலாமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

கனடியர் எவரும் சிறுகச் சிறுக ஐயாயிரம் டாலர் வரை சேமிக்கும் புதிய திட்டமொன்றைக் கனடிய அரசு அறிமுகம் செய்யவுள்ளது. 2009 ஆண்டிலிருந்து அமுலுக்கு வரும் இத்திட்டம் வரிவிலக்குடையது. Registered Tax-Free Savings Account (RTSA) என்பது இதன் பெயர். முழு விபரங்களையும் கனடிய நிதியமைச்சு விரைவில் அறிவிக்கவுள்ளது.

கனடிய மத்திய அரசின் புதிய வரவு செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களிப்பதில்லையென்று டியோன் தலைமையிலான லிபரல் கட்சி அறிவித்துள்ளது. ஆனால் புளொக் கியுபெக் கட்சியும், என் டி. பி. கட்சியும் எதிர்த்து வரக்களிக்கப் போவதாக அறிவித்துள்ளன. லிபரல் எதிர்க்காமையால் அரசு கவிழும் அபாயம் தவிர்க்கப்பட்டுள்ளது.

வருமானம் குறைந்த குடும்பங்கள் வீட்டு வாடகை செலுத்துவதற்கு மாதம் 100 டாலர்கள் வழங்கும் திட்டமொன்றை ஒன்ராறியோ மாகாண அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தத் திட்டத்துக்கு ROOF என்று பெயர். ஆகக்குறைந்தது 18 வயதுக்குட்பட்ட ஒரு பிள்ளையாவது கொண்ட ஒரு குடும்பம், வருடாந்த வருமானம் 20,000 டாலருக்குக் குறைவாகவும் இருக்க வேண்டியது அவசியம். விண்ணப்பப் படிவத்தை, 1 888 544 5101 இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெறலாம்.

மீண்டும் மீண்டும் மதுபோதையில் வாகனம் ஓட்டும் சாரதிகளிடமிருந்து வாகனத்தைப் பறிமுதல் செய்யும் புதிய சட்டம் கடந்த மாதம் 20 திகதியிலிருந்து ஒன்ராறியோவில் நடைமுறைக்கு வந்துள்ளது. பத்தாண்டு காலப் பகுதிக்குள் இரண்டு அல்லது மூன்று தடவைகள் மதுபோதையில் வாகனம் ஓட்டித் தண்டிக்கப்பட்டவர்களின் வாகனங்களே அட்டர்னி ஜெனரலின் உத்தரவின் கீழ் நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

"வரி செலுத்துவது கனடிய வாழ்க்கை முறை' என்னும் சுலோகத்துடன் கூடிய விளம்பரங்களைப் பரவலாக வெளிக்கொண்டுவர கனடிய வருமானவரித் திணைக்களம் தீர்மானித்துள்ளது. புதிய குடிவரவாளர்களை முதன்மைப்படுத்தி இந்த விளம்பரங்கள் அமைக்கப்படுகின்றன. புதிய குடிவரவாளர் சமூகங்கள் வருடாந்த வரிப் படிவங்களை நிரப்பி அனுப்புவதில் அக்கறை காட்டாதிருப்பதால் அவர்களுக்குக் கனடிய சட்டங்களையும் வாழ்க்கை முறையையும் தெளிவுபடுத்த இந்த ஏற்பாடு என்று திணைக்களம் கூறுகின்றது.

ரொறன்ரோ நகரிலும் அதன் பெரும்பாகத்திலும் அண்மைய காலத்தில் வீடு விற்பனை சரிவு நிலைக்குச் சென்றுள்ளது. இது தொடர்பான முதலாவது அறிக்கையின் பிரகாரம், 14 வீதம் வீடு விற்பனை வீழச்சி கண்டுள்ளது. ரொறன்ரோ நகர சபையின் வீடு சொத்து விற்பனை வரி அதிகரிப்பே இதன் முக்கிய காரணி என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலை அடுத்த ஓரிரு மாதங்களுக்குத் தொடருமானால், பல நெருக்கடிகளை இது உருவாக்கும் என்று வீடு கட்டிட முதலீட்டாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

கனடாவில் பாடசாலைகளின் உயர் வகுப்புகளிலிருந்து கல்வியை இடைநிறுத்தும் மாணவர்களின் (drop out) தொகை கடந்த ஆண்டில் குறைந்துள்ளதை அதிகாரபூர்வ புள்ளி விபரங்கள் காட்டுகின்றன. 2007 ஆண்டில் இத்தொகை இரண்டு வீதத்தினால் குறைந்துள்ளது. புதிய கல்வித் திட்டம் ஏற்படுத்திய மாற்றமும், தொழில்சார் கல்விக்கு வழங்கப்படும் முன்னுரிமையுமே இதற்கு முக்கிய காரணம் என்று பல்கலைக் கழக வட்டாரங்கள் கூறுகின்றன.

HERITAGE Education Funds
**RESP SAVINGS PLAN**
**கல்விச் சேமிப்புத் திட்டம்**

Your are eligible to apply for and Education Savings Grant of up to $7,200 per child

Your savings are more safe and secure

Your can start with a small amount

it's a more flexible plan

**EDUCATION IS A GREAT GIFT FOR YOUR FUTURE GENERATIONS**


உங்கள் பிள்ளைகளின் கல்விக்கான சேமிப்பு உங்கள் எதிர்கால தலைமுறைக்கான முதலீடு

WWW.KERUDAVIL.COM

**INCOME TAX PREPARATION**

Personal Income Tax
Small Business Income Tax
Computerized Returns

Graphic Land - 647. 219. 7576



S.Ganthiy
B.A. Srilanka
Enrollment Officer


416. 841. 1866
416. 955. 9303
E.mail: ganthiy@rogers.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வின் பதிவு

# கனடா தமிழ் ஆலயம் தொடக்க விழா



கவிஞரும், தமிழார்வலருமான கலாராஜனின் நீண்டகாலக் கனவான தமிழ் ஆலயம் நிறுவும் முயற்சி கடந்த மாதம் ஸ்காபரோவில் நடைபெற்ற அதன் தொடக்க விழாவுடன் நனவாகியுள்ளது. தமிழுக்கு ஒரு ஆலயம் அமைத்து, தமிழ் மொழியையும் தமிழ்க் கலைகளையும் ஒரு கூரையின் கீழ் வளர்க்கும் பணிக்கென தனியான ஓரிடமாக இது அமையவுள்ளதாக இங்கு உரையாற்றிய கலாராஜன் தெரிவித்தார். இதன் தொடக்க விழாவில் எழுத்தாளர்கள், கலைஞர்கள், முன்னாள் ஆசிரியர்கள், சமூக ஆர்வலர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். எழுத்தாளர் எஸ் ஜெகதீசன், ஒலிபரப்பாளர் இளையபாரதி, நடன ஆசிரியை சகுந்தலா மோகன், கவிஞர் வி. கந்தவனம், முன்னாள் அதிபர் பொ. கனகசபாபதி உட்படப் பலர் இங்கு உரையாற்றினர்.















யசோ சின்னத்துரை
கனடிய சட்டத்தரணி

வீடு
காணி
வர்த்தகச் சட்டம்

The Law Offices of
**Yaso Sinnadurai**
Barrister & Solicitor, Notary Public

Real Estate Law
Residential &
Commercial
Business Law

**Tel: 416 265 3456** **Fax: 416 265–2770**

2100 Ellesmere Road, Suite 202, Scarborough ON M1H 3B7 (Markham & Ellesmere)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*சிந்தனைப் பூக்கள்* 18

எஸ். பத்மநாதனின் தொடர்

# சிட்டுக்களே வாருங்கள்!

கல்வியில் மிகுந்த ஆர்வத்துடன் உங்களையெல்லாம் பாராட்டும் பெற்றோர்கள் சிலர் உங்கள் ஆரோக்கியத்திற்கு ஊறு விளைவிப்பவர்கள் என்று உங்களுக்கே தெரியாமல் இருக்கலாம்! உங்கள் வீடுகளில், நீங்கள் செல்லும் வாகனங்களில் உங்கள் தந்தையார் புகைபிடிப்பவராக இருப்பதால் ஏற்படும் ஆபத்தினையே குறிப்பிட மாமா விரும்புகின்றார். மது அருந்துவதால் அவருக்கே கேடு ஏற்படுகின்றது, ஆனால் புகை பிடிப்பதால் அயலவர்களுக்கு கூட ஆபத்தாகி விடுகின்றது.

மாமாவுக்கு புகை பிடிப்பது சம்பந்தமாக ஒரு சிந்தனையே பிறந்துள்ளது. அதாவது ஆங்கிலத்தில் 'cigarette smoking' என்று கூறுவதினை நாம் பல சொல்லாட்சிகளில் கூற வேண்டியுள்ளது. உண்மையில் பார்த்தால் 'அபிநயம் பிடிப்பது' என்று அறிந்த எமக்கு சிகரட் பிடிப்பது, சிகரட் குடிப்பது, சிகரட் புகைப்பது என்றெல்லாம் பல வகைகளில் எழுதுகின்றோம். பொதுவாக புகை பிடிப்பது என்பதில் சுருட்டு, கஞ்சா, பீடி கூட உள்ளடங்கும்.

புகை பிடிப்பவர்களைப் பார்த்தால் சிலவேளைகளில் விநோதமாக இருக்கும். சிலர் புகையை உள்ளே இழுப்பார்கள். சிலர் சுருள் சுருளாக வெளியே விடுவார்கள். சிலர் சிகரட்டை ஊதித் தள்ளுவார்கள். இந்த புகைப் பிரியர்களால் சிட்டுக்களாகிய உங்களுக்கே ஆபத்து அதிகம்.

நெதர்லாந்து பல்கலைக்கழகத்தினை சேர்ந்த பெர்ட் ஆரெட்ஸ் என்பவர் கூறுவதினை பாருங்கள். புகை பிடிப்பதால் மூச்சுத் திணறல், நிமோனியா, நுரையீரல் பாதிப்புகள், சில சந்தர்ப்பங்களில் புற்றுநோய் கூட ஏற்படலாம். இதனை தெரிந்து கொண்ட ஒன்ராறியோ அரசு இனிமேல் வாகனங்களில் குழந்தைகளை ஏற்றிச் செல்லும் போது புகை பிடிக்கக் கூடாது என்ற சட்டத்தினை கொண்டு வரவுள்ளது.

மாமாவுக்கு இப்படியான சட்டங்கள் வரும்போது நடைபெறும் நிகழ்வுகளை பார்த்து சிரிப்பு கூட ஏற்பட்டு விடுகின்றது! எமது இடங்களில் 'No smoking' என்று சிவப்பு எழுத்தில் பெரிதாக எழுதி சிகரட் படம் வரைந்து அதின் மேல் குறுக்காக வெட்டி படம் போட்டு கீழே தண்டம் 500 டாலர்கள் என இருக்கும். ஆனால் அதன் கீழே நின்று சிகரட் பிடிப்பார்கள். அடிக்கட்டைகள் நிறைந்து கிடப்பதும் அங்குதான்.

அறிவுள்ள சிட்டுக்களே! பாடசாலைகளில் பல மாணவர்கள் தாராளமாகவே புகைபிடிக்கின்றனர். படிப்பதனைத் தவிர இதனை ஒழுங்காகவே செய்கின்றனர். இதற்காகவே பொய் பேசுகின்றனர், களவு கூட எடுக்கின்றனர். நீங்கள் இந்த வட்டத்திற்குள் வந்து விடாதீர்கள்! உங்கள் தந்தையார் கூட புகைப் பிரியராக இருக்கலாம். அல்லது உங்கள் வீட்டுக்கு வரும் நண்பர்கள் கூட புகை பிடிப்பவர்களாக இருக்கலாம். இதன் தீமைகளையெல்லாம் நம்பகமாக எடுத்துக்கூறி திருத்த முயற்சித்துப் பாருங்கள். இந்த மாதம் இதனை எழுதும்படி தூண்டுதல் தந்த கதிர் மாமாவுக்கு நீங்களும் நானும் சேர்ந்து நன்றி கூறுவோம்.

மிகவும் நீண்ட காலமாகவே பிரச்சனையாகியுள்ள புகைப் பிடிப்போருக்கு எதிராக சட்டங்கள் வருவதினைவிட உங்கள் அன்பான அறிவுரைகளே கூடிய நன்மை பயக்கும். இன்றே இப்பணியில் இறங்குங்கள்.

மீண்டும் சந்திப்பேன்.

The Law office of
GARY
Anandasangaree

416 321 1100

Gary Anandasangaree
Barrister and Solicitor

10 Milner Busines Court
Suite: 210
Toronto, ON. M1B 3C6

Phone: 416 321 1100
Fax: 416 321 1107
gary@galaw.ca



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Dr. Shan A. Shanmugavadivel & Associates

## டாக்டர் அ. சண்முகவடிவேல்

* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், 'இம்பிளான்ற்'
சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட
அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**

**2466 Eglinton Avenue East, Unit:7**
**Scarborough, Ontario. MIK 5J8**
Monday to Saturday
Near Kennedy Subway (Rainbow VillageBuilding)

**(416) 266 5161**

**Main Square Dental Office**

7-2575 Danforth Avenue
Toronto, Ontario. M4C 1L5
Mon, Tues, Wedn, Thurs, Fri, Sat & Sun
Near Main Subway
Dr. Shan - (Wedn), Dr. Kalaichelvan (Thurs & Sun)
(Free consultations on alternate Sundays)

**(416) 690 0121**



**EARLY CHILDCARE ASST. (ECA)**
100% Guarantied Co-op placement

**JOB OPPORTUNITIES**
- *Child Care Assistant*
- *Child Care Worker*
- *Day Care Worker / Teacher*
- *Preschool Worker*
- *Infant Day Care Worker*

**COMPUTERIZED ACCOUNTING**

**JOB OPPORTUNITIES**
- *Accounting Assistant*
- *Accounts Manager*
- *Accounts payable clerk*
- *Accounts Receivable Clerk*
- *Payroll clerk*

**PERSONAL SUPPORT WORKER (PSW)**
100% Guarantied Co-op placement

**JOB OPPORTUNITIES**
- *Personal Support Worker*
- *Home Support Worker*
- *Personal Care Attendant*
- *Resident Care Aid*
- *Nursing Assistant*

**MEDICAL OFFICE ADMIN (MOA)**

**JOB OPPORTUNITIES**
- *Medical Office Assistant*
- *Medical Admin. Asst.*
- *Medical Receptionist*
- *Medical Secretary*
- *Hospital Ward / Unit Clerk*

**BUSINESS ADMINISTRATION**

**JOB OPPORTUNITIES**
- *Administrative Assistant*
- *Office Assistant*
- *Office Administrator*
- *Management Trainee*
- *Executive Assistant*

**NETWORK ENGINEERING**

**JOB OPPORTUNITIES**
- *Network Administrators*
- *Systems Administrators*
- *Technical Support Specialists*
- *Helpdesk Support*
- *LAN Administrators*

*Shaping careers for over 15 years*

*Changing your life begins with us.....*

*Week-ends & Evening Courses*
Canadian Security Courses,
QA / Software Testing, AccPac, Quick books, Ms Office,
Visual Basic, C++, Visual C#, .Net, A+, MCP, MCSE, CCNA

**Financial Assistance**
Financial Assistance may be available for those who qualify.
**We welcome:**
- Social Assistance receipients
- EI - currently receiving / received receipients
- Maternity benefits received receipients

# Computek College

**BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY**

**Kennedy / Sheppard**
(North-East Corner)
**Tel: 416-321-9911**
2347, Kennedy Road, Suite 301
Scarborough, ON., M1T 3T8

**Kennedy / Eglinton**
N/W Corner, Above Liberary
**Tel : 426.285.9941**
2390 Eglinton Ave East, Suite 248
Scarborough ON.,M1K2P5


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். காந்தி

18

# வெள்ளிப் பணம் - டாலர்

2007ம் ஆண்டுக்கான வருமான வரிப்பத்திரத்தினை பூர்த்தி செய்யும் காலம் January 01.2008ல் இருந்து April மாதம் 30ம் திகதிவரை உள்ள காலமாகும். இந்த வகையில் வருமானவரி பற்றி சில தகவல்களை இந்தவெள்ளிப்பணத் தொடரில் தருவது பொருத்தமாக இருக்கும் என எதிர்பார்க்கிறோம்.


பொதுவாக 2007ம் ஆண்டு வருமானவரியில் ஒருவர் $10,600 டாலருக்கு மேல் உழைத்திருக்கும் போதுதான் வருமானவரி செலுத்த வேண்டியிருக்கும். இது ஒரு குடும்பமாக இருந்தால் இது $21,000 டாலராக இருக்கும். அது மாத்திரமல்ல குடும்பத்தில 18 வயதுக்குட்பட்ட எத்தனை பிள்ளைகள் இருக்கின்றார்களோ அதற்கு ஏற்ப மேலும் $2000 டாலர்கள் அதிகரித்து செல்லும். ஒரு குடும்பத்தில 18 வயதுக்குட்பட்ட இரண்டு பிள்ளைகள் இருப்பார்களாயின் அவர்களுக்கு ஏறத்தாள 25,200 டாலர்கள் வருமானவரி விலக்களிக்கப்பட்ட தொகையாக அமையும். இது நான்கு பிள்ளைகளாக இருக்கும்போது 29,200 ஆக இருக்கும்.

அடுத்த முக்கிய விடயமாக குறைந்த வருமானத்தினை உடைய வேலை செய்து கொண்டிருக்கும் மக்களை ஊக்குவிப்பதற்காக Working Income Tax Benefit என்னும் புதிய நடைமுறையை அறிமுகப்படுத்தியிருக்கின்றார்கள். பகுதி நேரமாக வேலை செய்பவர்களுக்கும் குறைந்த சம்பளத்தில் வேலை செய்பவர்களுக்கும் தொடர்ந்து வேலை செய்ய கொடுக்கப்படும் ஊக்குவிப்பாக இது அமைகின்றது. இது ஒரு தனி நபர் வருடத்தில் $3000 டாலருக்கு வேலை செய்து உழைக்கும் போதும் அது $14,500 டாலருக்கு உட்பட்டு இருக்கும் போதும் இந்த சலுகை கிடைக்கின்றது. ஒருவருடைய உழைக்கும் வருமானம் $5,000 டாலர்களுக்கும் $9,500 டாலர்களுக்கும் இடைப்பட்டதாக இருக்கும்போது ஆகக் கூடியது $500 டாலர்கள் பெறுவதற்கான சாத்தியங்கள் உண்டு. இதற்கு மேலும் சில கட்டுப்பாடுகளும் விதிமுறைகளும் கணக்கில் கொள்ளப்படுகின்றது.

நீங்கள் தொழில் பார்க்கும் இடங்களில் உங்களுக்கு வருமானவரி கழித்துக் கொண்டும் மற்றும் ET, CPP போன்றவற்றுக்கும் கழிவுகளை மேற்கொண்ட பின்னர்தான் உங்களுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றது. இது எல்லோருக்கும் தெரிந்த விடயமாக இருந்தாலும் உங்கள் வருட வருமானம் எந்த தொகையாக அமையப் போகின்றது என்பதை அடிப்படையாக வைத்துத்தான் உங்களுக்கான வரிக்கழிவினை தொழில் நிறுவனங்கள் மேற்கொள்ளும். பொதுவாக உங்கள் வருட வருமானம் $30,000 டாலர்களாக இருக்குமாயின் $4,600 டாலர்கள் வருமான வரிக்கான கழிவினை உங்கள் தொழில்தரும் நிறுவனங்கள் மேற்கொண்டு இருக்க வேண்டும். இது 60.000 டாலர்களாக இருக்குமாயின் 14,000 டாலர்கள் வரிக்கழிவினை மேற்கொண்டிருப்பார்கள்

2007ம் ஆண்டுக்கான வருமானவரி வீதாசாரம் 37,178 டாலருக்கு உட்பட்டு இருக்கும் போது வருமானவரி 22.05% ஆக இருக்கும். உங்கள் வருமானம் $37,178க்கும் $74,357க்கும் உட்பட்டு இருக்கும் போது வருமானவரி வீதாசாரம் 31.15% வீதமாக இருக்கும்.

இந்த வகையில் பல்வேறுபட்ட நிதிநிலைமைகளில் உள்ளவர்களுக்கான எல்லா தகவல்களையும் ஒரு சிறிய பகுதியில் தரமுடியாவிட்டாலும் எல்லோரும் வருமான வரிபற்றிய அடிப்படை தகவல்களை தெரிந்து வைத்திருப்பது ஆரோக்கியமான செயல்பாடாக அமையும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கா தரிசனம்..

'இப்போ தானே போகவேண்டும் எனது மருமகனின் கல்யாணத்திற்கு வேறே எப்போ போவது' என்றேன். 'இல்லை...' என இழுத்தார். 'என்ன சொல்கிறீர்கள்' என்றேன். 'அங்கிருந்து வருகின்ற செய்திகள் அவ்வளவாக நல்லாயில்லை. அப்படியே ஆட்களைக் கொண்டு போய்விடுகிறார்களாம். நிறையப் பணம் கொடுத்துத் தான் மீட்கலாமாம்' என்றவர், 'எதற்கும் கொஞ்சம் யோசித்துப் போங்கோ' என்றார். வழமையாக என்னுடன் வார இறுதி நாட்களில் இலண்டனில் உள்ள நண்பர் புத்திரசிங்கம் தொலைபேசியில் தொடர்பு கொள்வது வழக்கம். அவரும் செய்தி கேட்டவுடன் 'கட்டாயம் போகவேண்டுமா' என்றார். 'போகத்தான் வேண்டும்' என்றேன். அவர் இலண்டனில் இரண்டொருவரின் பெயரைக் கூறி அவர்களுக்கு நடந்ததைக் கூறினார். 'அவரும் கடைசியில் யோசித்துச் செய்யும்' என ஆசீர்வதித்து விட்டார். உற்சாகம் குறைந்தாலும் போவது என்றே தீர்மானித்தேன் சென்றேன்.

அங்கே ஏறக்குறையப் பத்து நாட்கள் தங்கியிருந்தேன் பல இடங்கள் சென்றேன். காரில் தான் செல்வது வழக்கம். ஒருவிதமான இக்கட்டும் ஏற்படவில்லை. இன்னும் சொல்வதானால் ஒரு நாள் கூட வழியில் பொலிசோ, படைப்பிரிவினரோ என்னை மறித்ததும் இல்லை. என்னை ஒரு மனிதனாக மதித்ததாகத் தெரியவில்லை.

எனது சகோதரி நீர்கொழும்பில் வசிக்கின்றார். அன்றைய தினம் அவர் இல்லம் வருவதாகக் கூறியிருந்தேன். காலை எழுந்ததும் காப்பியுடன் பத்திரிகையை நோட்டம் விட்டபோது செய்தி ஒன்று பளிச்சிட்டது. முதல் நாள் இரவு கட்டுநாயகா விமான தளத்தில் புலிகள் விமானத் தாக்குதல் நடத்தியதாகச் செய்தி. 'இன்றைக்கு நீர்கொழும்பு போக வேண்டுமா' என்றார் மைத்துனி. இந்தப் 'போக வேண்டுமா' கேள்வி என்னைத் துரத்திய படியே வருகிறதே. 'போய்த்தான் பார்ப்போமே' என்றேன். அப்போ 'திலக்' உடன் போங்கள் என்றார். திலக் அவர்களுடைய சிங்கள ஓட்டுனர். சரி என்றேன். எனக்கோ பண்டாரநாயகா என்ற புண்ணியவான் தனிச் சிங்களச் சட்டம் கொண்டு வருவதற்கு முன்னர் ஒரு தேரோவிடம் படித்த சிங்களத்தில் இரண்டொரு சொற்கள் இன்னும் மறக்கவில்லை. திலக் தனிச் சிங்களச் சட்டத்துக்குப் பின்னர் நியா யமான தமிழ் உபயோகச் சட்டம் வந்த பின்னர் உதித்தவன். அவனைப் பொறுத்த மட்டில் நியாயமான அளவு தமிழ் தேவையில்லாமையால் 'சிங்களம் மட்டும் தான்' பிரகிருதியாக இருந்தான். புண்ணியவானுக்கு நாலு முக்கிய ஆங்கிலச் சொற்கள் அத்துபடி. எனக்கு சிங்களத்தில் அதற்கு இரண்டொன்று கூடுதலாக ஆகவே எமது பிரயாணம் கொஞ்சம் பயானகத்துடன் ஆரம்பமானது என்று சொல்லித்தான் தெரிய வேண்டும் என்பதில்லை. திலக் மிகவும் நல்லவன் ஆனால் கொஞ்சம் அவசரக்குடுக்கை. நம் இருவருக்கும் சகோதரி வசிக்கும் வீட்டின் விலாசம் மாத்திரம் தான் தெரியும். வீட்டினைக் கண்டுபிடிக்க உதவி செய்வதற்கு தொலைபேசி எண் இருந்தது. சென்றோம். பாதையில் ஒரு பிரச்சினையும் இல்லை.

முதல் இரவு நிகழ்ச்சி நடந்ததற்கான எந்த அறிகுறியுமே காணப்படவில்லை. கட்டுநாயகா போகையில் ஒரு சிறு தயக்கம் இருந்தது. ஆனால் எல்லாமே சுய நிலைப்பாட்டினைக் காண்பித்தது. நீர்கொழும்பினை அடைந்தோம். எங்கே வீடு. கண்டு பிடிக்க வேண்டும். திலக்குக்கும் அந்த ஊர் வீதிகள் பரிச்சயமில்லை என்பது புலனாகியது. ஏதோ தெரிந்தவன் மாதிரி ஓட்டி ஓட்டி எனக்கு ஊரினை இரண்டு முறை வலம் வந்து காண்பித்து விட்டான். நான் தொலைபேசியில் அழைத்து விசாரித்தால் அவர்கள் கிழக்கே போ வடக்கே போ என்றார்கள். எனக்கோ திக்குத் திசை தெரியவில்லை. திலக்கோ அவர்கள் சொல்லி முடியுமுன்னரே நிறுத்திவிட்டு ஆம் ஆம் எனக்குத் தெரிகிறது எனக் கூறி காரினை ஓட்டத் தொடங்கிவிடுவான். உண்மையிலே சொல்லப் போனால் திலக் இப்படி அரைகுறைத் தொலைபேசிப் பேச்சுடன் ஓடியமையால் ஆறு, ஏழுமுறை ஒரே இடத்திற்கு வர ஊரவர்கள் ஆச்சரியமாக எங்களைப் பார்க்க எனக்கோ திக்கென்றது. கடைசியில் எனது சகோதரி, ஒருவரை நாங்கள் நின்ற இடத்திற்கு அனுப்பி எங்களைத் தனது இல்லத்திற்கு அழைத்துச் செல்ல எனது திக்விஜயம் இனிதே முடிவுற்றது.

**4. அற்புதம்:**
விமானப் பிரயாணங்களின் போது எனக்கு நடந்த இடுப்பு குறை மீள் பிரதியீட்டல் (partial replacement) அறுவைச் சிகிச்சை காரணமாக சில்லுக் கதிரை உதவி கேட்டுப் பெற்றுக் கொள்வதுண்டு. உண்மையிலேயே அதில் என்னை வைத்து ஒருவர் தள்ளிக் கொண்டு போகும் பொழுது மனதுக்குக் கஷ்டமாகவும் கூச்சமாகவும் இருக்கவே செய்யும். ஆனால் விமான கூடத்தில் உள்ள தூரத்தை நான் நடந்து கடப்பது என்றால் அதன் மேலேற்றி, கொண்டு செல்லி உதவிகள் எல்லாவற்றின் உதவி பெற்றாலும் கூட நான் விமானத்தை அடைவதற்கு முன்னர் விமானம் கிளம்புவதற்காக என்னை அழைத்திருப்பார்கள். பாவங்கள் எத்தனையோ பேர் அவசர அவசரமாக சொந்தங்கள் பந்தங்களைப் பார்க்கும் ஆவலுடன் ஆசனத்தில் இறுகக் கட்டியபடி காத்திருக்க வைப்பது நியாயமற்ற செயல் அல்லவா? ஆகவே, ஏனைய பயணிகளின் நன்மை கருதி நான் எப்பொழுதும் சில்லுக் கதிரை உதவி கேட்பேன். அல்லாவிட்டால் என் கதி?

ஆனால் சில்லுக் கதிரையால் ஒரு அனுகூலமும் உள்ளது என்பதையும் மறைப்பதற்கில்லை. அதில் ஏறி உட்கார வேண்டியதுதான் எல்லாம் கிடுகிடு என அவசர கதியில் நடக்கும் என்னைக் கொண்டு சென்று விமானத்திற்குள் புகும் படலையடியில் உட்கார வைத்து விடுவார்கள். குறைந்தது ஒன்று அல்லது ஒன்றரை மணித்தியாலம் கொண்டு போன புத்தகமே கதி என உட்கார வேண்டும். இடையிடையே குளியல் அறைப் பக்கம் எட்டிப் பார்க்க வேண்டும். அப்போது கைப் பொதியைக் காவுவது கஷ்டம் என்பதால் அருகில் இருப்பவரிடம் பல்லிளிக்க வேண்டும். அவர் எனது நிறத்தைக் கண்டவுடன் பின் லேடனின் ஆளோ என்ற சந்தேகத்தில் வேண்டா வெறுப்பாக பரதமுனிவரின் வெறுப்பு ரசத்துக்கான ஸ்தாயிபாவத்துடன் தலை அசைப்பார்.
விமானத்தில் பயணிகள் ஏறவதற்கான படலை திறக்கப்படும் பொழுது இரண்டு முறைகள் கையாளப்படுகிறது. சில வேளைகளில் சில்லுக்கதிரைப் பிரயாணிகளை முதலில் அழைத்துக் கொண்டு போவார்கள். பின்னரே ஏனையவர்களை உட்செல்ல விடுவார்கள். வேறு சமயங்களில் ஏனையவர்களை உட்செல்ல அனுமதித்த பின்னர் சில்லுக் கதிரைப் பயணிகளுக்குக் கருணை காட்டுவார்கள். எப்படியாயினும் எம்மை விட்டுப் போக மாட்டார்கள் என்ற துணிவு. எமக்கென ஒரு இடம் இருக்கும் என்ற நம்பிக்கை.

அன்றைய தினம் நான் குளியல் அறை சென்ற சமயம் பார்த்து சில்லுக் கதிரைப் பயணிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்கள். நான் முக்கியமான அலுவலில் ஈடுபட்டிருந்தமையால் அது என் காதிற்கு எட்டவில்லை. சாவகாசமாக எனது அலுவலை முடித்துக் கொண்டு வந்து பார்த்தால் பொதியினைக் காவல் காக்கச் சொன்னவரைக் காணவில்லை. பொதி மாத்திரம் பத்திரமாய் வைத்த இடத்திலேயே இருந்தது. விமானத்தில் ஏறுவதற்குப் பயணிகளை உள்ளே அனுப்பிவிட்டார்கள் எனத் தெரிந்தது. எனவே அங்கே நின்ற அலுவலரிடம் சென்று நான் சில்லுக்கதிரைப் பயணி என்னை ஏன் அனுப்பவில்லை என்றேன். நாம் அழைத்தோமே அப்போது நீ என் குரல் கொடுக்கவில்லை என மறுத்தான் விட்டார். அட, நான் அப்போது அவசர காரியமாக குளியல் அறை சென்றுவிட்டேன் என்றேன். அப்போ, இங்கே இரு எல்லாப் பயணிகளும் விமானத்தில் ஏறிய பின்னர் உன்னை ஏற்றி விடுகிறேன் எனக் கூறி அருகில் இருந்த ஒரு ஆசனத்தைக் காண்பித்தார். அமர்ந்தேன். மேலும் மேலும் பயணிகள் போய்க் கொண்டிருந்தனர். ஒரு கறுவல். நல்ல உயரம். கட்டுமஸ்தான உடல் அமைப்பு. அவசர அவசரமாக வந்தார். உள்ளே போவதற்கான நுழைவுச்சீட்டினைக் காண்பித்ததும் போ என்றார்கள். அவர் போகும் போது தனது காற்சட்டைப் பையின் உள்ளே கை வைத்து எதனையோ எடுத்தார். வெளியே வந்த கை சும்மா வரவில்லை. தனக்குத் துணையாக காற்சட்டைப் பையினுள் இருந்து ஒரு மடிப்பாக ஐந்து 20 டொலர் நோட்டுக்களையும் வெளியே கொண்டு வர, அவை பரிதாபமாக நிலத்தில் சிதறின.
(அடுத்த இதழிலும் வரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தில்லையில் தமிழ் படும் பாடு



நக்கீரன்
தலைவர் - தமிழ்ப் படைப்பாளிகள் கழகம்

# என்றுமுள்ள செந்தமிழ் - 9


தேவாரங்களை ஓதுவார் என்னும் பிரிவினரை கோயில்களில் படிக்க முதலாம் இராசராசன் ஏற்பாடு செய்தான் எனக் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. இன்றும் பேரளவில் இல்லாவிட்டாலும் ஓரளவு தேவாரங்கள் ஓதுவார்களால் கோயில்களில் பாடப்பெற்று வருகின்றன. ஆனால் பிராமணர்கள் எவராவது தேவாரங்கள் ஓதுவதைப் பார்க்க முடியாது.

**"சைவமும் தமிழும் ஒன்று. சைவம் இன்றேல் தமிழ் இல்லை. தமிழ் இன்றேல் சைவம் இல்லை"** என்கிறார்கள் பக்தர்கள். ஆனால் நடைமுறையில் அதனைக் காண்பது அரிதாக இருக்கிறது.

**"தில்லைக் கோயிலின் சிற்றம்பல மேடையில் நின்று தேவாரம் திருவாசகம் பாடுவேன்"** என்று ஓதுவார் ஆறுமுகசாமி தனிமனித போராட்டம் நடத்துகிறார். "பாடக்கூடாது. தில்லைச் சிற்றம்பல மேடையில் நின்று தேவாரம், திருவாசகம் பாடுவது மரபுக்கு விரோதமானது" எனத் தீட்சிதர்கள் அவருக்கு தடைவிதித்து விட்டார்கள்.

ஆதீனங்கள், மடங்கள், சைவப் பழங்கள், தமிழ் ஆர்வலர்கள், அமைப்புகள் என்று பல பேரையும் பல ஆண்டுகளாகச் சந்தித்து இந்த அநீதியைத் தட்டிக் கேட்குமாறு மன்றாடியிருக்கிறார் ஆறுமுகசாமி. ஆனால் யாரும் அவருக்குக் கைகொடுக்க முன்வரவில்லை. **"எல்லாம் வல்ல"** தீட்சிதர்களை எதிர்த்துப் போராடுவதற்கு எந்த அமைப்பும் முன்வரவில்லை.

8.5.2000 அன்று தனியொரு மனிதனாகச் சிற்றம்பல மேடையேறித் தேவாரம் பாடினார் ஆறுமுகசாமி. அந்தக் கணமே தீட்சிதகர்கள் அவரை அடித்துத் துவைத்து மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துவிட்டார்கள்!



2004 இல் இந்தச் சிக்கல் மக்கள் மத்தியில் கொண்டு செல்லப்பட்டது. போராட்டங்கள் வெடித்தன. உடனே தங்களுடைய நிலையை நியாயப்படுத்திக் கொள்ள இந்து அறநிலையத் துறையையே தீட்சிதர்கள் பயன்படுத்திக் கொண்டார்கள். இணை ஆணையர் மூலம் "தில்லைச் சிற்றம்பல மேடையில் நின்று தேவாரம், திருவாசகம் பாடுவது மரபுக்கு விரோதமானது" என்று ஒரு ஆணையைப் பெற்றுக் கொண்டார்கள். பிறகு, **"தமிழில் பாடினால் கோயிலின் புனிதம் கெட்டு விடும். சட்ட ஒழுங்குச் சிக்கல் ஏற்படும்"** என்று கீழ் நீதிமன்றத்தில் ஒரு தடையாணையையும் வாங்கி வைத்துக் கொண்டார்கள்.

நீண்ட போராட்டத்தின் இறுதியில் அறநிலையத்துறை ஆணையர் புதிய ஆணை ஒன்றைப் பிறப்பித்தார்.

"தில்லைக் கோயில் தீட்சிதர்களின் தனிப்பட்ட சொத்து அல்ல. திருச்சிற்றம்பல மேடையிலிருந்து தமிழ்த் திருமுறைகளை தீட்சிதர்கள் மட்டுமே "தொன்று தொட்டு" ஓதி வருகின்றனர் என்பது உண்மையல்ல. பக்தர்கள் வழிபடலாம், ஆனால் தமிழை உச்சரிக்கக் கூடாது என்பதும் அது கோயிலின் புனிதத்தைக் கெடுக்கும் என்பதும் தமிழுக்கு இழைக்கப்படும் பேரிழுக்காகும். கோயில் நிருவாகத்தை தங்கள் முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரவேண்டும் என்ற உள்நோக்கத்தில் தீட்சிதர்களே உருவாக்கிய கட்டுப்பாடாகத்தான் இது தோன்றுகிறது" என்று ஆணையரின் ஆணை கூறியது.

எனினும், "கால பூசைகளின்போது திருக்கோயிலால் நியமிக்கப்படும் ஓதுவார்களைத் தவிர வேறு யாரும் திருமுறைகளைப் பாடக்கூடாது. பக்தர்கள் பூசை முடிந்தபிறகுதான் பாடலாம்" என்று ஆணை கூறியது. இது 'பாம்பும் சாகாமல் தடியும் முறியாமல்' தமிழக அரசின் மழுங்கத்தனத்துக்குப் பொருத்தமான வகையிலும் தீட்சிதர்களின் சாதி உரிமையில் தலையிடாத வகையிலும் இந்த உத்தரவு வழங்கப்பட்டிருந்தது. ஆன போதிலும் தீட்சிதர்கள் இதை ஏற்பதற்குக் கூட அணியமாக இல்லை.

அறநிலையத்துறை ஆணையர் உத்தரவு கையில் கிடைத்தவுடனே, "2007 மே 17ஆம் நாளன்று சிற்றம்பல மேடையேறி ஆறுமுகசாமி தேவாரம் பாடுவார்" என்ற அறிவிப்பு வெளிவந்தது. ஆனால் காவல்துறை அதனைத் தடுத்துவிட்டது.

அறநிலையத்துறை ஆணையரின் ஆணைக்கு இடைக்காலத் தடை வாங்குவதற்கு தீட்சிதர்கள் உயர்நீதி மன்றம் சென்றார்கள். "அறநிலையத் துறை ஆணையரின் ஆணையில் கருத்து வேறுபாடு இருந்தால், அரசுக்கு மேல்முறையீடு செய்யுங்கள். இடைக்காலத் தடை விதிக்க முடியாது" என்று கூறி தீட்சிதர்களின் விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்தார் நீதிபதி ஜெயபால்.

வாதில் வெல்ல முடியாத தீட்சிதர்கள் சூதில் இறங்கினார்கள். நீதிபதி ஜெயபாலின் தீர்ப்புக்கு எதிராகத் தலைமை நீதிபதியிடம் மேல்முறையீடு செய்தார்கள். எதிர் வழக்காளியான ஆறுமுகசாமிக்கு அறிவித்தல் அனுப்பாமலேயே காதும் காதும் வைத்தாற்போல வழக்கு முடியும் வரை, தமிழுக்கு நிரந்தரத் தடையே **(Absolute Stay)** விதித்து அருள்பாலித்தார்கள் சென்னை உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதி அஜித் பிரகாஷ் ஷா, ஜோதிமணி ஆகியோர். இந்தத் தீர்ப்பு 2007 யூன் 08 ஆம் நாளன்று வழங்கப்பட்டது.

"சிவபெருமானின் ஆணையின் பேரில் கைலாயத்திலிருந்து 3000 தீட்சிதர்களை வரவழைத்தான் மன்னன் இரண்யவர்மன். சிதம்பரத்துக்கு வந்து சேர்ந்ததோ 2999 தீட்சிதர்கள்தான். 'ஒரு ஆளைக் காணோமே' என்று எல்லோரும் கவலையுற்றபோது "அந்த தீட்சிதன் நான்தான்" என்று ஒரு அசரீரி ஒலித்தது. நடராசனே ஒரு தீட்சிதர்தான் என்பதால் நாங்கள் தெய்வப் பிறவிகள். இந்தக் கோயிலை நிருவாகம் செய்வது தீட்சிதர்களின் பிறப்புரிமை. அதன்மீது ஆணையிட அறநிலையத்துறைக்கு அதிகாரம் கிடையாது.

இந்தக் கோயிலில் வேத நெறிப்படி வழிபாடு நடக்கிறது. ஆகம விதிகள் இதற்குப் பொருந்தாது. திருமுறைகளை நம்பியாண்டார் நம்பி தொகுப்பதற்கு முன்னமே அவற்றைத் தில்லையில் தீட்சிதர்கள் பாடி வருகிறார்கள். ஆன்மீக நம்பிக்கைகளைப் பகுத்தறிவு கொண்டு ஆராய முடியாது. மத நம்பிக்கைகளுக்கும் நடைமுறைகளுக்கும் எதிராகத் தமிழைப் புகுத்துவதுதான் இந்த அரசின் கொள்கை. எனவே, ஆணையரின் உத்தரவு தொடர்பாக இந்த அரசிடம் முறையீடு செய்தால் நீதி கிடைக்காது. ஆறுமுகசாமியின் வழிபாட்டு உரிமை பறிக்கப்படுவதாக ஆணையர் கூறுகிறார்.
வழிபடுவதற்குத்தான் உரிமையே தவிர எங்கே நின்று வழிபடுவது, என்ன பாடுவது என்பதெல்லாம் வழிபாட்டு உரிமையில் சேராது."

→



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R&S Auto Sales

Top Quality Used Car Dealer

வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட
வாகனங்களை விற்பது
எங்கள் விசேட திறன்!

28 ஆண்டுகள் அனுபம்!



RADHA

HONDA
TOYOTA
GM-MINI VANS

ON THE SPOT
FINANCING

4362 Sheppard Ave. East
at Brimley

Tel: 416 412 3838

## என்றுமுள்ள..

இவை தீட்சிதர்களுடைய முறைப்பாட்டில் காணப்படும் வாதங்களின் ஒரு பகுதி. இந்த வாதங்கள் தொடர்பாக நீதிமன்றம் எந்தக் கேள்வியையும் எழுப்பவில்லை.

**"தில்லையில் சிவனுக்கு முன்னால் தேவாரம் பாடக்கூடாது" என்று தீட்சிதர்கள் தடையாணை வாங்கியிருக்கிறார்கள் என்றால், "எவனுக்கு முன்னாலும் தேவாரம் பாடக்கூடாது" என்று**

**தடையாணை வாங்கியிருக்கிறார்கள் தருமபுரம் ஆதீன கர்த்தாக்கள்.** தில்லைக் கோயிலில் வேதநெறிப்படி வழிபாடு நடப்பதால் அங்கே தமிழ் நுழையக் கூடாது என்பது தீட்சிதர்களின் வாதம். தமிழில் வழிபாடு செய்வதும் குடமுழுக்கு நடத்துவதும் அனைத்து சாதியினரையும் அர்ச்சகராக்குவதும் ஆகம நெறிக்குப் புறம்பானது என்பதால் தமிழைத் தடை செய்யவேண்டும் என்பது ஆதீனங்களின் வாதம்.

இவர்களுடைய முறையீட்டை ஏற்று தமிழில் நடத்திவரும் அர்ச்சகர் பயிற்சி வகுப்புகளுக்கும் தமிழ் குடமுழுக்கு மற்றும் தமிழ்த் திருமறைகளை ஓதி நடத்தப்படும் திருமணங்களுக்கும் தடை விதித்திருக்கிறது உயர்நீதி மன்றம். மே 30 ஆம் நாளன்று சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி ஜோதிமணி, தலைமை நீதிபதி அஜித் பிரகாஷ் ஷா ஆகியோர் இந்தத் தடை உத்தரவைப் பிறப்பித்திருக்கின்றனர்.



தமிழுக்கு எதிராகவும், தமிழ் மக்களுக்கு எதிராகவும் இத்தகைய தடையாணைகள் அடுத்தடுத்துப் பிறப்பிக்கப்பட்ட போதும் இவற்றுக்கெதிராக குமுறலோ கொந்தளிப்போ கண்டன அறிக்கைகளோ எதுவும் இல்லை. இந்து அறநிலையத்துறை பிறப்பித்துள்ள ஆணைக்கு நீதிமன்றம் தடை விதித்தது. ஆனால் தடையை நீக்கக் கோரி மேல் முறையீடு கூடச் செய்யாமல் தமிழக அரசு மவுனம் சாதித்தது. தமிழக அரசு அனைத்து சாதியினரும் அர்ச்சகராவதற்குச் சட்டம் இயற்றி விட்டதாகவும், "தமிழிலும் அர்ச்சனை செய்யப்படும்" என்ற அறிவிப்பை மாற்றி "**தமிழில் அர்ச்சனை செய்யப்படும்**" என்று பலகையைத் தொங்கவிட்டு விட்டதாகவும் பெருமைப் பாராட்டிக் கொள்கிறார் முதல்வர் கருணாநிதி. ஆனால், "தமிழ் அர்ச்சனைக்குப் பயிற்சியே கொடுக்கக்கூடாது" என்று நீதிமன்றம் தடை விதிக்கும்போது சும்மா இருப்பதே சுகம் என அவரும் அவரது அரசும் நடந்து கொள்கிறது.

திருவள்ளூர் மாவட்டம் பேரம்பாக்கத்தில் உள்ள நரசிம்ம சுவாமி கோயிலில் புரோகிதரல்லாத இருவரை அர்ச்சகராக நியமித்து மே 7 ஆம் நாள் இந்து அறநிலையத்துறை ஆணை வெளியிடுகிறது. "பட்டாச்சாரியார் குடும்பத்தில் பிறந்து ஆகம பாடசாலையில் 6 ஆண்டுகள் குருகுலப் பயிற்சி பெற்றவர்களைத்தான் அர்ச்சகராக நியமிக்க முடியும் என்று ஆகமத்தில் கூறப்பட்டுள்ளது. எனவே இந்த நியமன ஆணையை இல்லாது செய்ய வேண்டும்" என்று உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தார்கள் புரோகிதர்கள். உடனே, "இரு அர்ச்சகர்களின் நியமன உத்தரவையும் நிறுத்தி வைத்திருப்பதா" பதில் அளித்தது தமிழக அரசு.

தமிழ் நெய்யால் தொந்தி வளர்த்த ஆதீனங்களோ **"தமிழில் அர்ச்சனை செய்தால் உலகம் அழியும் என்றும் குடமுழுக்கு நடத்தினால் அரசு கவிழும் என்றும் தமிழன் அர்ச்சகனானால் கடவுளுக்குத் தீட்டு"** என்றும் பகிரங்கமாக வழக்குத் தொடுக்கின்றன.

"குஷ்புவுக்கு கோயில் கட்டித் தமிழ் குடமுழுக்கு, தமிழ் வழிபாடு நடத்திக் கொள்ளட்டும். ஆகம விதிப்படி அமைந்த கோயில்களில் அதைச் செய்ய முடியாது" என்று தருமபுரம் ஆதீனத்துக்காகத் தோன்றிய வழக்குரைஞர் என்.ஆர்.சந்திரன் திமிரோடு நீதிமன்றத்தில் தமிழை எள்ளி நகையாடினார்.

வெறும் 250 தீட்சிதப் பார்ப்பனர்கள் ஆறு கோடி தமிழ் மக்கள் முதுகின் மேல் எவ்வாறு சவாரி செய்ய முடிகிறது? (வளரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் இருவர் - நமக்கு மூவர்
## புதிய தமிழ்த் தம்பதியினருக்கு 5000 டாலர்கள் ஊக்குவிப்புப் பணம்

புலம்பெயர்ந்தவர்களுக்கான
தமிழர் தகவலின் சிறப்புத் திட்டம்

தமிழர் தகவல் சஞ்சிகை புலம்பெயர்ந்தவர்களுக்கான சமூக நலன் சார்ந்த புதிய திட்டமொன்றினை அறிமுகம் செய்வதில் மகிழ்ச்சி அடைகின்றது. எமது சமூகத்தில் □ழந்தை பிறப்பு வீதம் வெ□வாகக் □றைந்து வருவதைக் கவனத்தில் எடுத்து இந்தத் திட்டத்தை உருவாக்கியுள்ளோம்.

ஒரு வரியில் இத்திட்டத்தைச் சொல்வதானால், '2005 ஜனவரி முதலாம் திகதிக்□ப் பின்னர் சட்டப்படி திருமணம் புரிந்த/புரியும் தமிழ்த் தம்பதியினர், திருமணத் திகதியிலிருந்து வரும் ஆறு வருடங்களுக்□ள் மூன்று □ழந்தைகளைப் பெறுவார்களானால். அவர்கள் 5000 கனடிய டாலர்களை ஊக்□விப்புப் பணமாகப் பெறுவர்'.

எத்தனை தம்பதியினருக்□ இந்த ஊக்□விப்புப் பணம் வழங்கப்படும் என்ற கட்டுப்பாடில்லை. ஒவ்வொரு தம்பதியினருக்□ம் தலா ஐயாயிரம் டாலர்கள் வழங்கப்படும். முதலாவது தம்பதியினருக்கான பணத்தை 'அகிலன் அசோஷியேற்ஸ்' நிறுவனம் வழங்க முன்வந்துள்ளது. யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவர் தலைவனாகவிருந்து அகால மரணமடைந்த எஸ். தி. அகிலன் ஞாபகார்த்தமாக இந்நிதி வழங்கப்படுகின்றது.


தமிழ்க் □ழந்தைகள் ஊக்□விப்புத் திட்டத்தின் முதற் கட்டம் 2010 டிசம்பர் 31ல் முடிவடையும். அதாவது, 2005 ஜனவரி  1 திகதிக்□ப் பின்னர் திருமணமா□ம் தம்பதியினர், அடுத்து வரும் ஆறு வருடங்களான 2010 டிசம்பர் 31க்□ முன்னர் எப்போது மூன்று □ழந்தைகளைப் (ஒற்றைப் பிரசவங்களாக) பெறுகின்றனரோ, அப்போது தமக்கான 5000 டாலர்களைப் பெறுவார்கள்.

எங்கள் களத்திலும் புலத்திலும் (தாயகத்திலும் புகலிடத்திலும்) பிள்ளைகள் பிறப்பு வீதம் மிக அருகி வருகின்றது. புதிய தம்பதியர் ஒரு □ழந்தையுடன் நிறுத்தி விடுகின்றனர். மறுபுறத்தில், திருமணமா□ம் வயதும் பின்னோக்கிச் செல்கின்றது. அடுத்த பக்கத்தில், உள்நாட்டு யுத்தத்தினால் தமிழர் இறப்பு வீதம் ஓங்கிக்கொண்டிருக்கின்றது. கடந்த இரண்டு தசாப்தத்தில், அப்பாவி மக்களும் போராளிகளுமாக சுமார் ஒரு லட்சத்தை எட்டிப்பிடிக்□ம் எம்மவர் மரணமாகியுள்ளனர். பத்து லட்சம் வரையானோர் புலம் பெயர்ந்துள்ளனர்.

ஒரு காலத்தில் ஒவ்வொரு தமிழர் □டும்பத்திலும் சராசரியாக 4 அல்லது 5 பிள்ளைகள் என்றிருந்த நிலை இன்று மாறிவிட்டது. ஒரு பிள்ளையைப் பெறுவதற்□க்கூட மூன்று-நான்□ வருடங்களைப் பின்போடும் தம்பதியினரையே இன்று கூடுதலாகக் காண்கின்றோம். இந்த நிலைமை. மாற்றம் பெற வேண்டும். தமிழர் சனத்தொகை கீழோங்கிச் செல்வதில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டியது காலத்தின் நியதி.

இந்தத் தகவலை உங்கள் நண்பர்கள் உறவினர்களிடம் எடுத்துச் சொல்லுங்கள். □ழந்தைச் செல்வங்களின் அதிகரிப்பின் நோக்கத்தை அவர்களிடம் எடுத்துக் கூறுங்கள். இந்த ஊக்□விப்புத் திட்டம் பற்றிய விபரமான விளக்கத்தை தமிழர் தகவல் பிரதம ஆசிரியர் திரு எஸ். திருச்செல்வத்துடன் தொடர்பு கொண்டு பெறலாம்.

இந்தத் திட்டம் ஒரு பொழுதுபோக்□ப் போட்டியன்று. சமூக அக்கறையுள்ள பலர் கூடி எடுத்த முடிவின் வெளிப்பாடு. மற்றைய முன்னணித் தமிழ் ஊடகங்களிலும் இவ்விபரங்கள் வெளியிடப்படும். விரிவான விபரங்களைப் பெற 416 920 9250.



**Jude**
**Anthonypillai** LL.B. (Canada)
Barrister, Solicitor & Notary Public
Former Asst. Crown Attorney

**Phone**
**416 332 8547**

**யூட் அந்தோனிப்பிள்ளை**
கனடிய வழக்கறிஞர்
முன்னாள் அரச வழக்கறிஞர்

**தொலைபேசி**
**416 332 8547**
**தொலைநகல்**
**416 332 8379**

2390 Eglinton Ave. East
Suite 259
Scarborough ON
M1K 2P5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கணேஷ துர்க்கா தேவஸ்தானம்

# SRI GANESHA DURGA HINDU TEMPLE OF MISSISSAUGA







**தொடர்புகளுக்கு:**

'ஸ்ரீ விஜயலெட்சுமி வாசா அதிபர்', 'சிவாகம கிரியா பூஷணம்'

## சிவஸ்ரீ. பஞ்சாட்சர கிருஷ்ணராஜ குருக்கள்

(ராஜன் குருக்கள்)

கனடிய திருமணப்பதிவு அதிகாரி, இந்துமதகுரு, புங்குடுதீவு - 10ஆம் வட்டாரம்
ஆலயப் பிரதமகுரு, ஆலய ஸ்தாபகர், முதல்வர் - அறங்காவலர் சபை

**7220 Tranmere Drive**
**Mississauga, ON. L5S 1L6**
**TEL: 905-405-0011 / 905-501-0011**

**www. sriganeshadurga.com**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்க்கரையோடு...

**இரண்டாம்தர நீரிழிவு**
சிலருக்கு சதயச்சுரப்பியில் ஏற்படும் அழற்சி, காயம் போன்ற நோய்நிலைகளால் அல்லது அறுவைச் சிகிச்சை மூலம் சதயச்சுரப்பி அகற்றப்பட்ட காரணத்தால் அல்லது கோர்மோன் சம்மந்தமான சில நோய்களினால் அல்லது சில மருந்துகளின் பக்க விளைவுகளால் நீரிழிவு ஏற்படும்போது அதை இரண்டாம்தர நீரிழிவு (secondary diabetes ) என அழைக்கின்றனர்.

**நீரிழிவு நோயின் குணங்குறிகள்**
உடற்கலங்களுக்குள் குளுக்கோஸ் உட்சென்று பயன்படுத்தப்படமுடியாதுபோக குருதியில் அதன் அளவு அதிகரித்து காணப்படுவதால் குணங்குறிகள் ஏற்படுகின்றன. ஆரம்ப நிலையில் அதிகரித்த உடற்சோர்வு, சிறுசீரில் குளுக்கோசு வெளியேறுதல், அதன்காரணமாக அதிக அளவு சிறுநீர் கழித்தல், அளவுக்கதிகமான தாகம், உடல் நிறை குறைந்து போதல், பார்வையில் கோளாறு, கைகால்களில் விறைப்பு, ஆண்மைத்தன்மை குறைதல், இலகுவில் தொற்றுக்கள் ஏற்படுதல் போன்ற அறிகுறிகள் காணப்படலாம். நாளாக இந்நோயினால் சிக்கல்கள் ஏற்பட்டால் அவை சம்பந்தமான அறிகுறிகளும் வெளிப்படுகின்றன.

**நீரிழிவு நோயை எப்படிக் கண்டுபிடிப்பது?**
இரவில் 8 மணிநேரத்துக்கு நீர் தவிர ஆகாரம் எதுவும் உட்கொள்ளாமலிருந்து காலையில் குருதியிலுள்ள குளுக்கோசின் அளவைப் பரிசோதித்து அறிந்து கொள்வதன் மூலம் இந்நோயை இலகுவாகக் கண்டுபிடிக்க முடியும். இப்பரிசோதனையில் குளுக்கோசின் அளவு 7.0 mmol/L இல் அல்லது இதற்குமேல் இருந்தால் நீரிழிவு நோய் இருப்பது நிச்சயிக்கப்படுகிறது.

சிலவேளைகளில் இப்பரிசோதனைக்குப் பின்பு இனிப்பூட்டப்பட்ட நீராகாரம் உட்கொள்ளக் கொடுத்து 2 மணிநேரத்தின் பின் குருதிப்பரிசோதனை செய்து குளுக்கோசின் அளவு 11.1 mmol/L இல் அல்லது அதற்கு மேல் இருக்குமானால் நீரிழிவு நோய் இருப்பது நிச்சயப்படுத்தப்படும்.
அனேகமாக ஆரம்ப நிலையில் இந்நோயின் அறிகுறிகளை ஒருவர் பெரிதாகக் கவனத்துக்கு எடுத்துக்கொள்ளாததால் இந்நோய் இருப்பது பற்றி அவரால் அறிந்துகொள்ள முடியாது போய்விடுகிறது. பெரும்பாலும் வழமையான மருத்துவப் பரிசோதனையின்போது அல்லது வேறு நோய்களுக்காக குருதிப் பரிசோதனை செய்யப்படும்போதுதான் நீரிழிவு நோயிருப்பது தெரிய வருகிறது. எனவே 30 வயதுக்கு மேற்பட்டவர்கள் ஆண்டுக்கு ஒரு முறையாவது குடும்பநல மருத்துவரிடம் சென்று உடற்பரிசோதனை செய்து கொள்வது அவசியம்.

இக்கட்டுரையில் நீரிழிவு நோய் ஏற்படுவதற்கான காரணங்கள், அதன் வகைகள், குணங்குறிகள், நோயை அறிந்து கொள்ளும் முறைகள் என்பன பற்றி அறிந்து கொண்டோம். இந்நோய்க்கும் இந்நோயினால் ஏற்படக்கூடிய சிக்கல்களுக்கும் செய்யக்கூடிய சிகிச்சைகள் பராமரிப்பு முறைகள் ஆகியவை பற்றிய தகவல்கள் பல இருப்பதால் அவைபற்றி அடுத்து வரும் இதழ்களில் ஆராய்வோம்.

## கர்ப்பிணித் தாய்மார் கோப்பி அருந்தாதீர்!

கோப்பியில் காணப்படும் கஃபீன் (Caffeine), கர்ப்ப காலத்தின் ஆரம்ப கட்டமான முதல் 12 வாரங்களில் கருச்சிதைவை உண்டாக்குவதற்கான அபாயம் உள்ளதாக மருத்துவ ஆய்வுகள் கூறுகின்றன. மிகக் குறைந்தளவான கஃபீன் கூட கருச்சிதைவு ஏற்படுவதற்கான அபாயத்தை அதிகரிப்பதாக இவ்வாய்வுகள் தெரிவிக்கின்றன. லண்டன் பி.பி.சி. இணையச் செய்திச் சேவை, ஒரு நாளைக்கு ஆகக் கூடியது 300 mg அல்லது 4 கப் கோப்பி அருந்தலாம் என்கிறது. ஆனால், அமெரிக்க மருத்துவ சஞ்சிகை ஒன்று, ஒரு நாளைக்கு 200mg இற்கு அதிகமான கஃபீன் கோப்பி மூலம் அருந்துவோருக்கு, கோப்பி அருந்தாதவர்களை விட ஆபத்து இரண்டு மடங்காகும் என்கிறது.

NLR ACCOUNTING AND TAX SOLUTIONS

Personal Tax Returns
Corporate Tax Returns
Book-keeping
RST, GST, Payroll service

E-File
confidential
friendly and
fast service

Phone
416 888 1128
416 492 7973

Location

2525 Pharmacy Av.
Pharmacy Av & Finch Av. East
(Inside Universal Textiles)

NLR



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• Loans • Mortgages • Insurance Claims • Traffic Tickets •

Scholarship Plan [RESP]

JRB Universal Inc.

Almost All Services Available

B: 416 752 7555
C: 416 937 9081



R.R. Rajkumar
B.Com (Hons), M.B.A.

Any Referral Service

• Credit Counseling • Accounting & Tax Services •


# ஆலய சன்னிதானங்களில்

## கனடா றிச்மன்ட்ஹில் இந்து ஆலயம்

வட அமெரிக்காவின் 'பெரிய கோயில்' என அழைக்கப்பெறும் றிச்மன்ட்ஹில் ஆலயம் திங்கட்கிழமையிலிருந்து வியாழக்கிமை வரையும் காலை 8:00 மணி முதல், பகல் 1:30 மணி வரையும், பின்னர் பிற்பகல் 5:30 மணியிலிருந்து இரவு 9:00 மஸி வரையும் திறந்திருக்கும். வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும் மற்றும் விடுமுறை தினங்களிலும் காலை எட்டு மணி தொடக்கம் இரவு ஒன்பது மணி வரையும் திறந்திருக்கும். இரவு 9:30 மணிக்கு ஆலயம் மூடப்படும். ஆலய நிகழ்ச்சிகள் பற்றிய மேலதிக விபரங்களுக்கு ஆலயத்துடன் 905 883 9109 தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளலாம்.

## மிசிசாகா ஸ்ரீகணேச துர்க்கா ஆலயம்

மிசிசாகா 7220 Trammere Driveல் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ஸ்ரீகணேச துர்க்கா இந்து ஆலயத்தில் தினசரி மூன்று காலப் பூஜைகளும் சிறப்பாக இடம்பெற்று வருகின்றது. செவ்வாய்க்-கிழமைகளிலும் வெள்ளி முதல் ஞாயிற்றுக்கிழமைகளிலும் சிறப்பு பூஜைகள் நடைபெறுகின்றன. கிரியா வழிபாடுகளாலும், திருமணச் சடங்குகளாலும் வட அமெரிக்கா முழுவதும் நன்கு பிரபல்யமான சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜ குருக்கள் (ராஜன் ஐயா) அவர்களே இந்த ஆலயத்தை நிறுவியுள்ளார். இதன் பிரதம குருக்களும், அறங்காவல் சபையின் முதல்வரும் இவரே. ஆலய தொலைபேசி இலக்கம் 905 405 0011. ஸ்ரீவிஜயலட்சுமி வாசாவின் தொலைபேசி இலக்கம் 905 501 0011.

## ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலயம்

ஸ்காபரோ கென்னடி வீதியில் 3025ம் இலக்கக் கட்டிடத்தில் யுனிட் இலக்கம் 10 இல் (பிஞ்ச் வீதிக்கும் மக்னிக்கல் வீதிக்கும் இடையில், சன் பிளவர் பேணிச்சர் நிறுவனத்துக்கு முன்னால்) ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலயம் அமைந்துள்ளது. ஆலயத்தில் தினசரிப் பூஜைகளுடன், முக்கிய தினங்களில் விசேட வழிபாடுகளும் இடம்பெறுகின்றன. வாராந்தம் வெள்ளிக்கிழமைகளில் இரவுப் பூஜையின் பின்னர் சுவாமி உள்வீதி வலம் வருதல் இடம்பெறுகின்றது. ஆலயத்தின் வழமையான மற்றும் சிறப்பு நிகழ்ச்சிகள் உட்பட்ட மேலதிக விபரங்களுக்கு ஆலயத்துடன் 416 291 8500 இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.


நான் ஒரு வழக்கறிஞர் இல்லை

Motor Vehicle Accident

Criminal

வாகன விபத்து!

கிறிமினல்!

உங்கள் கணிப்பு தவறாகலாம்..

உரிய



சட்ட ஆலோசனைகளுக்கு

கலகலப்பு தீசன்

416-803-5296

WWW.KALAKALAPPU.NET




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைக்கு குடிக்கக் கொடுப்பது என்ன?

"இவனுக்கு சாப்பாடு ஒண்டும் உட் செல்லாது... சோடா வேணும் எண்டு அடம் பிடித்துக் குடிப்பான்" என்று அம்மா சொன்னதைக் கேட்டுப் பெருமையுடன் சிரித்த அந்தப் பிள்ளையின் வாய் முழுக்கச் சொத்தைப் பற்கள்.

இனிப்புச் சோடாக்கள், இனிப்பூட்டப்பட்ட பழச்சாறுகள் போன்றவை எந்தக் குழந்தைக்குத்தான் பிடிக்காது. "சாப்பாடு போகுதில்லை, இதையாவது குடிக்கட்டும்" என்றோ, "பாவம் சின்னஞ் சிறிசு ஆசைப்படுகிறதைக் கொடுக்கத்தானே வேணும்" என்றோ கட்டுப்பாடில்லமல் இவற்றைத் தாராளமாகக் கொடுத்தால் ஆரோக்கியம் தான் கெடும்.

அதீத எடை வைப்பதற்கும், பற்கள் சொத்தை ஆவதற்கும் இத்தகைய இனிப்புப் பானங்கள்தான் முக்கிய காரணம் என்பது சொல்லியா தெரிய வேண்டும்.

இன்னுமொரு தாயின் பிரச்சனை முற்றிலும் எதிர்மாறானது. அவளின் குழந்தை குடிப்பது மிகவும் ஆரோக்கியமான பானம்! இவனுக்கும் சாப்பாடு உட் செல்லாதுதான். நிறையப் பால் குடிப்பான். இரண்டரை வயதாகியும் இன்னமும் போத்தலில்தான்.

"இனி போத்தலில் பால் கொடுக்க வேண்டாம். கோப்பையில் குடிக்கக் வையுங்கள். தினமும் இரண்டு கப் பால் கொடுங்கள்" என ஆலோசனை வழங்கப்பட்டது. காரணம் போத்தலில் குடிப்பது இலகுவானது. விரைவாக வயிறு நிறைந்துவிடும். எனவே சாப்பிடத் தோன்றாது.

பால் போஷாக்குள்ள பானம்தான். அதிலுள்ள புரதம், கல்சியம், விற்றமின் A&D ஆகியவை குழந்தையின் உடல் வளர்ச்சி, பொதுவான ஆரோக்கியம், திடமான பற்கள், உறுதியான எலும்பு ஆகியவற்றிற்கு உதவும். ஆயினும் ஆறு வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு திட உணவும் அவசியம் என்பதை மறந்து விடக் கூடாது. பாலைத் தவிர யோஹட், சீஸ் ஆகியவற்றிலும் பாலிலுள்ள போஷாக்குகள் இருக்கின்றன.

குழந்தைகளுக்கு என்ன கொடுக்கலாம்? மூன்று வேளை உணவிற்கும் பின்னர் பால் கொடுப்பதில் தவறில்லை. இடையில் கொதித்து ஆறிய நீரைக் குடிப்பதற்கு குழந்தையைப் பழக்கப்படுத்துங்கள். பழச் சாறுகளும் நல்லது. போத்தலில் அடைக்கப்பட்ட இனிப்பூட்டிய பழச்சாறுகள் அல்ல. உடன் பிழிந்து கரைத்துக் கொடுங்கள். படிப்படியாக பழத்தைச் சாறாக்காமல் முழுமையாக உண்பதற்கும் பழக்கப்படுத்துங்கள்.

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

## கனடா தின மாணவர் விவேகப் போட்டி

கேள்விகள் அடுத்த இதழில் வெளிவரும்.

முதற் பரிசு தங்கப் பதக்கம்

சரியான பதில்களை அனுப்பும் அனைவருக்கும் பரிசுகள் வழங்கப்படும்.




"ஆசை, ஆசை இப்பொழுது
பேராசை இப்பொழுது
ஆசை தீரும் காலம் எப்பொழுது?"

வீடு வாங்கும் உங்கள்
ஆசைகளை நிஜங்களாக்கிவிட
இன்றே அழையுங்கள்...

"Honesty, Integrity, Professionalism"

சாள்ஸ் தேவசகாயம் M.A
Sales Representative
Direct: 416-284-5555
24Hrs: 416-284-4751
880 Ellesmere Rd., Suite 203
Scarborough. Ont. M1P 2W6

ROYAL LEPAGE
Connect Realty, Brokerage
INDEPENDENTLY OWNED AND OPREATED


Graphic Land - 647. 219. 7576





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**The Children's Education Trust of Canada**

offered to the public by

**Children's Education Funds Inc.**



10 டாலரிலிருந்து ஆரம்பித்து
7200 டாலர்கள் வரை
கனடா அரசாங்கம் வழங்கும்
நன்கொடையைப் பெற்று
(20 வீத Grant)
உங்கள் பிள்ளைகளதும்
பேரப்பிள்ளைகளதும்
கல்வி வாய்ப்பை
ஊக்குவியுங்கள்.

**சமூக நம்பிக்கையையும் நன்மதிப்பையும் பெற்ற**

**சிவா கணபதிப்பிள்ளை**

**அவர்களை அழைத்து விபரங்களைப் பெறுக!**

Siva Kanapathypillai
Branch Manager

**416 438 0660, 416 438 3578**
**416 899 6044**
**இல்லத் தொலைபேசி:**
**905 472 1139**
**email**
**s.kanapathypillai@cefi.ca**


# முக்கிய சில தகவல்கள்

## தீயணைப்புப் படையில் சேர விண்ணப்பிக்கலாம்

ரொறன்ரோ தீயணைப்புப் படையில் ஆட்களைச் சேர்ப்பதற்கு இப்போது விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இந்த மாதம் முதலாம் திகதியிலிருந்து 7 திகதி வரை விண்ணப்பங்களை அனுப்பலாம். 2002 ஆண்டுக்குப் பின்னர் இப்பொழுதுதான் தீயணைப்புப் படைக்கு ஆட்கள் சேர்க்கப்படுகின்றது. மேலதிக விபரங்களை www.toronto.ca/fire/recruitment இணையத்தளத்தில் பார்வையிடலாம்.

## ஆகக் றைந்த சம்பளம் 75 சதத்தால் அதிகரிப்பு

ஒன்ராறியோ மக்களுக்கான ஆகக்குறைந்த மணித்தியாலச் சம்பளம் 75 சதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த மாதம் (மார்ச்) 31 திகதியிலிருந்து புதிய சம்பள நிர்ணயம் அமுலுக்கு வருகின்றது. இதன் பிரகாரம், மணித்தியாலச் சம்பளம் 8 டாலர் 75 சதமாக இருக்கும். தற்போது இது எட்டு டாலராக இருக்கன்றது.
2010 ஆஸ்டில் மணித்தியாலச் சம்பளம் பத்து டாலராகுமென்று ஒன்ராறியோ மாகாண அரசாங்கம் ஏற்கனவே அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## எட்டு சாரதி பயிற்சி நிலையங்கள் அனுமதியை இழந்தன

ரொறன்ரோவிலுள்ள எட்டுச் சாரதி பயிற்சி நிலையங்களின் அனுமதியை, ஒன்ராறியோ போக்குவரத்து அமைச்சு கடந்த மாதம் ரத்துச் செய்தது. இவை தொடர்பாகக் கிடைத்த புகார்களின் மீதான விசாரணையின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக, அமைச்சின் செய்திக் குறிப்பு தெரிவிக்கின்றது. ஆரம்ப சாரதி கல்விச் சான்றிதழ் வழங்கலில் இடம்பெற்ற தவறுகளையும் அமைச்சு கண்டுபிடித்துள்ளது. புதிதாகச் சாரதி அனுமதிக்குப் பயிற்சி பெறச் செல்வதற்கு முன்னர், அனுமதி ரத்தானவர்கள் பற்றிய விபரங்களை ஊர்ஜிதம் செய்யுமாறு அமைச்சு பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.

## ரொறன்ரோவில் கொலைகளும் தீவிபத்துகளும் அதிகரிப்பு

ரொறன்ரோ நகரில் இந்த வருடத்தின் முதல் இரண்டு மாதங்களிலும் பல தீவிபத்துகள் இடம்பெற்றுள்ளன. இதனால் பலர் இறந்துள்ளனர் கூடுதலானோர் எரிகாயங்களுக்குள்ளாகினர் கட்டிடங்கள், வீடுகள் இடிந்துள்ளன. அதேசமயம், முதல் இரு மாதங்களிலும் பத்துக் கொலைகள் ரொறென்ரோ நகரில் இடம்பெற்றுள்ளன. இவைகளுள் அனேகமானவையும் துப்பாக்கி பயன்படுத்தப்பட்டவை.

## மார்ச் விடுமுறையில் பயணிப்பவர்களுக் .....

மார்ச் மாத விடுமுறை இந்த மாதம் 7 திகதி ஆரம்பிக்கின்றது. இக்காலத்தில் பல்லாயிரக்கணக்கானோர் விமானப் பயணங்களை மேற்கொள்வது வழக்கம். அவ்வாறு பயணிக்கவுள்ளவர்கள் விமான நிலையங்களில் தேவையற்ற தாமதத்தைத் தவிர்ப்பதற்காக சில முக்கிய அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டன. விமானப் பயணத்தில் எதனைக் கொண்டு போகலாம், எதனைக் கொண்டு போகக்கூடாது போன்ற பாதுகாப்பு விபரங்களை முற்கூட்டியே அறிய www.catsa.gc.ca என்ற இணயதத்தளத்தைப் பார்வையிடவும்.

## மார்ச் 17ம் திகதிய மூன்று இடைத்தேர்தல்கள் நடைபெறுமா?

இந்த மாதம் 17 திகதி ரொறன்ரோ மத்தி, விலோடேல் உட்பட்ட நான்கு நாடாளுமன்றத் தொகுதிகளுக்கு இடைத் தேர்தல் நடைபெறவுள்ளது. இவற்றுள் இரண்டு லிபரலின் கோட்டைகளாகக் கணிக்கப்பட்டுள்ளவை. ஒட்டாவாவில் புதிதாக எழுந்துள்ள நிலைவரம், ஸ்டீபன் ஹாப்பரின் ஆட்சியைக் கவிழ்க்கலாம் என்று அரசியல் வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன. இந்த மாதம் 16 திகதிக்கு முன்னர் அவ்வாறான நிலைமை ஏற்படுமானால், 17ம் திகதிய இடைத் தேர்தல்கள் ரத்தாவது தவிர்க்க முடியாததாகலாம் என்று ஒட்டாவாச் செய்திகள் தெரிவிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DR. ILLANGO & ASSOCIATES

*Dental Office*

BRACE FOR A GREAT SMILE

DR. ILLANGO & ASSOCIATES

பல் சிகிச்சையில் சகல துறைகளிலும்
எமது சேவை

## DR. M. ILLANGO

B.D.S. Dip.Orth (Oslo).General Practioner Mainly Orthodontics
கிளிப் போடும் வேலை

## DR. MEHRAN MOJGANI

D.D.S. Dip. Perio.Gum Specialist
பல்முரசு வைத்திய நிபுணர்

## DR. SABAPATHY RAVEENDRAN

B.D.S.M.S.F.D.SR.C.S (Eng). General Practioner (Mainly Oral Surgery)
(அறுவைச் சிகிச்சையில் இலங்கையிலும் இங்கிலாந்திலும் நிபுணத்துவம் பெற்ற பல்வைத்தியர்)

## DR. ALI ADIPBFAR


D.D.S.M.D.F.R.C.D (C). Plastic Surgeon
(Wisdom tooth extraction under sedation)
மயக்கமாக்கி ஞானப்பற்கள் அகற்றுபவர்

## DR. JANAKI ILLANGO

B.D.S. குடும்ப பல் வைத்தியர்

## Dr. LAI YUNG CHEONG

B.D.S. குடும்ப பல் வைத்தியர்




**SCARBOROUGH OFFICE**
3852 Finch Ave. East, Units 204, 303
Scarborough, ON
**(416) 292-7004**





**MISSISSAUGA OFFICE**
3025 Hurontario St., # 102
Mississauga, ON
**(905) 270-7844**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 1206-0585

ஓம்

# ஸ்ரீகௌரி மங்கள சேவை



அனைத்து இந்து மத கிரியைகளுக்□ம்
கனடிய திருமண பதிவு அதிகாரி, இந்து மத□ரு

## சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமார குருக்கள்

(ஐயாமணி) புங்□டுதீவு-10
ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய பிரதம □ரு


திருமணம், திருமணப் பதிவு
புதுமனை பு□தல்
கடை திறப்பு வைபவம்
புண்யாக வாசனம்
பூப்புனித நீராட்டு விழா
பூமாலை, ஆண்டாள் மாலை
சடை நாகம்
தலை நகை முழுவதும்
முத்து மணவறை
தலைப்பாகை
பந்தல் அலங்காரம்
கல்யாண பூசைப் பொருட்கள்
முத்துச் சப்பரம்
ஆலயத் திருவிழா
ஆலய வைபவங்கள்
ஆகிய அனைத்துக்□ம்
எப்போதும் எம்முடன்
தொடர்பு கொள்ளுங்கள்

**416-266-3333**


628 E Birchmount Road
Scarborough, Ontario. M1K 1P9

ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய தொலைபேசி இலக்கம் 416-291-8500

# NKS Draperies & Blinds



**210 Silver Star Road, Unit. 825**
**(Midland & Finch) Scarborough, ON**
**416 321 6420**



- **Vertical blinds**
- **Venetian blinds**
- **Draperies**
- **Curtains**
- **Shutters**

உங்கள்
இல்லங்களை
மாளிகையாக்கிட

அழையுங்கள்
கேதா

தமது சிறப்பான சேவையினால்
தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org